மங்கையர்க்கு அரசி சரிதம்



ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்
சென்னை

மங்கையர்க்கு அரசி
சரிதம்

27-2

FOR FAVOUR OF REVIEW.

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்
எழுதியது

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்
4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு
சென்னை 1

 [விலை 50 ந. பை.

முதற் பதிப்பு 1958

Printed by Thompson & Co Private Ltd (Minerva Press)
33 Broadway Madras 1

27-2

முன்னுரை

'தோன்றின் புகழொடு தோன்றுக' என்முர் திருவள்ளுவர். மனிதராகப் பிறந்தால், புகழ் பெறுதல் வேண்டும். புகழ் உடம்பு மாயாது; வெற்றுடம்பு மாயும்! புகழ் உடம்பு பெற்ருேரே செத்தும் சாகாதவர்! அவரது புகழ் நிலே நிற்கிறது அல்லவா ?

மங்கையர்க்கு அரசி பெண்ணுகப் பிறந்தவள். பெருங் குணம் படைத்தவள்; பேரறிவும் வாய்ந்தவள். அரசன் பாண்டியன் சைவ சமயத்தை மறந்தான். சமணருடன் சேர்ந்தான். வேத மார்க்கத்தை இகழ்ந்தான். ஆயினும், அவன் தேவி எப்படி இருந்தாள்'

அந்த அரசி சைவ மதத்தைக் கைவிடவில்லே. சிவ பெருமானே மறக்கவில்லே. தினம் சொக்கனது ஆலயம் சென்ருள். அரசனது மனம் நல்வழியில் திரும்ப வேண்டும் என்று வேண்டிஞள். திருஞானசம்பந்த சுவாமிகளே அழைத்து வந்து, மன்னவனே நல்வழிப்படுத்திஞள்.

ஆதலிஞல், ஞானசம்பந்தரது புகழ்ச்சிக்கு அவள் பாத்திரம் ஆஞள். தேவாரம் என்னும் திருமுறையிலே அவளது பெயர் இடம் கொண்டது. புகழோ நின்று நிலவுகின்றது. என்ன பாக்கியம் பாருங்கள்! ஈசனேப் பேசும் பாட்டிலே அவள் புகழ் படிந்துள்ளது. நமது சிறுமியர் அவ்விதம் பெயரும் புகழும் பெறுதல் வேண்டும். இந்நூலின் நோக்கம் அதுவே!

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

பொருளடக்கம்

27-2

மங்கையர்க்கு அரசி சரிதம்

1. தோற்றுவாய்

எல்லா உயிர்களிலும் ஆண், பெண் உண்டு. ஆணும் பெண்ணும் அடங்கியதே உலகம். இரு கண் போல்வர் ஆணும் பெண்ணும். ஆண்டவனை யும் சக்தி, சிவம் என்போம். அவனை அர்த்த நாரீசுவரன் என்பர் பெரியோர். **மீனுட்சி சுந்தரம், ஜானகி ராமன்** என்று தெய்வத்தை அழைக்கிறோம் அல்லவா?

ஆணும் பெண்ணும் கூடிவாழ்தலே குடும்பம் ஆகும். அந்த வாழ்வை இல்லறம் என்பர்; இல் வாழ்க்கை என்றும் சொல்லுவர். ஆணோ பெண்ணோ தனித்து வாழ முடியாது. சேர்ந்தே வாழ்தல் வேண்டும். அந்த வாழ்க்கையில் ஓர் இன்பம் பிறக்கும்; நன்மை பலவும் உண்டாகும். இல்லறத்தின் பெருமை இது.

ஆண் பெண் இருவரிலும் பெண்ணுக்கே பெருமை அதிகம். மனைக்கு விளக்கம் மடவார். அதன் நன்கலம் நல் மக்கள் பேறு. பிள்ளை பெற்ற தாயார் தன் மகனை அன்புடன் பாராட்டுவாள்; அழகுடன் சீராட்டுவாள்; ஞானப்பாலும் ஊட்டி வளர்ப்பாள்.

வளர்க்கவே, அம்மகன் பெருவேந்தன் ஆவான்; உயர் வீரனுக விளங்குவான்; மேதை என்று பேர் பெறுவான்; குணசீலனுகக் குலவுவான்; கருணை வள்ளலாகவும் இருப்பான். எனவே, மகனைச் சிறக்க வைத்தல் தாயே! அதுவே தாயின் பொறுப்பும் ஆகும். ஆதலினுல், 'அன்னையும் பிதாவும் முன் அறி தெய்வம்' என்பதில் அன்னைக்கே முதல் இடம்.

ஆகவே, பெண்ணுவாள் நல்லவள் என்று நடத்தல் வேண்டும். குணவதி என்றும் பெயர் பெறுதல் அவசியம். அந்நிலையில், 'பெண்ணரசி, பெண்கள் நாயகம், பெண்கள் திலகம்' என்று அவளை உலகம் ஏத்தும்; புகழும்; போற்றும்.

அவள் தனது கணவனையும் நல்லவனுக ஆக்குதல் வேண்டும். அவன் தவறி நடந்தால், அன்புடன் திருத்துதல் கடமை. அன்னவளே உத்தம மனைவி ஆவாள். தன்னைக் காத்து, தன் கணவனைப் பேணி, நேர்மையாக நடப்பவளே பெண் என்று திருவள்ளுவர் பேசுவார் பெருமையாக.

அன்னை போன்ற அன்பும், அடியாள் போன்ற பணிவிடையும், திருமகளேபோல் அழகும், பூமி போல் பொறுமையும், மதிமந்திரிபோல் புத்தியும் வாய்ந்தவளே பெண்ணரசி. அவள் பெண் குலத்தின் வெற்றியும் ஆம். 'ஆவதும் பெண்ணுலே' என்ருல், அத்தகைய பெண்ணினுல் எல்லாம் ஆகும்.

அவ்விதம் மங்கையர்க்கு அரசி என்று ஒரு பெண் இருந்தாள். சிவனிடத்தில் அவள் பற்று மிகுந்து

நின்ருள். கணவனிடம் கருணை கொண்டு நடந்தாள். தவறியபொழுது, அவனை அன்புடன் திருத்த முயன்ருள். அவனும் திருந்திஞன். அவளை மனமாரமெச்சினுன். பின்பு, சிவபக்தியிலும் சிறந்தான்.

சிவபக்தியில் சிறந்து நிற்பவரை **நாயன்மார்** என்பர். அவர்களில் அறுபத்து மூவர் உண்டு. எல்லாரிலும் சிறந்தவர் **திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள்** என்பவர். இவர் சிவபெருமான் மீது பல பாசுரங்கள் பாடியுள்ளார். அவை **தேவாரம்** எனப்படும். **திருமுறை** என்றும் அவற்றைக் கூறுவர்.

தேவாரத்திலே மங்கையர்க்கு அரசியை நமது சம்பந்தர் புகழ்ந்து பாடியிருக்கிருர். அறுபத்து மூன்று நாயன்மார்களில் மங்கையர்க்கு அரசியும் ஒருத்தியாக விளங்குகின்ருள். நாயன்மார்களின் சரித்திரம் **பெரிய புராணம்** என்பதாம். அது பாடியவர் **சேக்கிழார்** சுவாமிகள். சேக்கிழாரும் மங்கையர்க்கு அரசியை ஏத்தி ஏத்தி எழுதியுள்ளார்.

பெரிய புராணத்தையும் சேக்கிழாரையும் **அனபாயன்** என்னும் அரசன் யானை மீது ஏற்றி வைத்தான்; நகர் வலமும் செய்வித்தான். மங்கள வாத்தியங்களும் அவன் சேனைகளும் தொடர்ந்து சென்று மரியாதை செய்தன.

அந்த மங்கையர்க்கு அரசி ஒரு பெண்ணுகப் பிறந்தவள். தனது நெறியினுல் உயர்ந்தவள். அவள் சிறந்த வரலாறு எப்படி? அதனை இங்கே உரைப்போம்

---

2. மதுராபுரி

பூ உலகில் எத்தனையோ தேசங்கள் உண்டு. நாம் வசிப்பது பாரததேசம். இது பாருக்குள்ளே நல்ல தேசம். பழமையும் பெருமையும் பொருந்திய தேசமும் ஆகும். இதன் வடக்கே **இமய** மலை. தெற்கே **குமரி** முனை. மேற்கிலும் கிழக்கிலும் கடல்.

பாரத தேசத்தின் தென்கோடியில் உள்ள பூமி **தமிழகம்**. தமிழ்மொழி வழங்குவதனால், தமிழகம் என்று பெயர் வந்தது. நமது தாய்மொழி தமிழ். தமிழே நாம் பேசுகின்றோம். அதனால், நாம் அனைவரும் தமிழர். தமிழகத்தின் ஒரு பாகம் பாண்டி நாடு.

பாண்டியர் என்போர் வழிவழியாக ஆண்டு வந்தனர். அதனால் பாண்டி நாடு என்று பெயர் வந்தது. பாண்டியருக்கு **வழுதி** என்று ஒரு பெயர் உண்டு. ஆகவே, பாண்டி நாட்டை வழுதி நாடு என்றும் அழைப்பர். தமிழகத்தின் தென்கோடியில் உள்ளது பாண்டி நாடு.

அதனால், **தென்னாடு** எனவும் அதனை உரைப்பர். அதன் தலைநகரம் **மதுராபுரி**. சிவபெருமான் அங்கே ஒரு சமயம் **சோமசுந்தர பாண்டிய**னாக வந்து தோன்றினான். அந்நாட்டையும் ஆண்டு வந்தான். ஆதலினால், ''தென்னாடு உடைய சிவனே!'' என்று அவனை அழைப்பர் பெரியோர்.

சிவபெருமான் மட்டுமா ! **உமாதேவியும்** மதுரையில் மலையத்துவஜ பாண்டியன் மகளாக வந்து உதித்தாள்! **தடாதகைப் பிராட்டி** என்று பெயர் பூண்டாள். முருகக்கடவுளும் ஒரு பாண்டியனுக்கு மகனாக வந்து பிறந்தார். **உக்கிரகுமார பாண்டியன்** என்று பெயர் பெற்றார். இவர்களும் மதுராபுரியில் அரசு செலுத்தினர்.

பாண்டி நாட்டுக்கு இன்னும் ஒரு பெருமை உண்டு. அமிழ்தினும் இனியது நம் தமிழ்மொழி. அம்மொழி பிறந்து வளர்ந்த இடம் மதுரை மாநகரமே. பாண்டிய வேந்தர் அம்மொழியை நன்கு வளர்த்து வந்தனர். தலை, இடை, கடை என்று மூன்று சங்கங்களும் அப்படியே.

தமிழ்மொழியின் ஆதிகர்த்தா **அகத்தியர்.** தமிழ் தந்தவர் அவரே ! அவர் வாழும் மலை **பொதிய** மலை எனப்படும். அது பாண்டிய நாட்டில்தான் உள்ளது. அங்கே, **வையை, பொருனை,** முதலிய நதிகள் ஓடுகின்றன. அவை அந் நாட்டை வளம்படுத்தும்; மிகவும் செழிக்க வைக்கும்.

உதாரணமாக, ஆறுகளிலும் ஓடைகளிலும் வாளைமீன் துள்ளிக் குதிக்கும். அணைகளிலும் வரம்புகளிலும் செம்பொன் கொழிக்கும். வயல்களிலே தாமரையும் நீலமும் பூக்கும். மலைக் குன்றுகளிலே கொம்புத்தேன் சொரியும். வீதியெல்லாம் தமிழ் மணம் கமழும்.

முன்னம் அந்நகரிலே அந்தணர் வீதி, அரசர் வீதி, வேளாளர் வீதி என்று பல வீதிகள். அந்தணர் வீதியில் அருமறைகள் கோஷிக்கும். அரசர் வீதியிலே ஆயுதப் பயிற்சி நடக்கும். வணிகர் வீதியிலே நவரத்தினங்கள் மலிந்து தோன்றும். வேளாளர் வீதியிலே நவதானியங்களும் குன்றுபோல் குவிந்து கிடக்கும்.

பாண்டி நாடு ஐம்பத்தாறு காதம் பரப்பு உள்ளது. அதன் தெற்கு எல்லை கன்னியாகுமரி. வடக்கு எல்லை வெள்ளாறு. கிழக்கு எல்லை கருங்கடல். மேற்கு எல்லை மலைவெளி. இந்த நான்கு எல்லைக்கு உட்பட்ட நாட்டிலே எங்கும் சைவசமயம் பரவி இருந்தது. சிவ நேசமும் பக்தியும் சிறந்து நின்றன.

வேதநெறி எங்கும் தழைத்து இருந்தது. அடியார் கூட்டம் எங்கும் தென்படும். சிவபூஜையும் பஜனையும் சிறப்பாக நடக்கும். அரசரும் குடிமக்களும் சைவச் செல்வராக விளங்கி வந்தனர். பக்தி நெறியினால் எங்கும் முக்தி நெறி ஓங்கி நின்றது. ''அரஹர மஹாதேவ'' என்னும் நாதம் நாடு முழுவதும் செவிடுபடும். குடிமக்கள் எல்லாரும் சுத்த சைவரே.

3. கடவுள்

பரீட்சையில் தேற விரும்பினுல், குழந்தைகள் கடவுளை வேண்டிக்கொள்ளும். துன்பம் நேர்ந்தால், ''கடவுளே கருணை இல்லையா ?'' என்று பெரியோர் துதிப்பர்; ஆலயம் சென்று ஆண்டவனுக்கு அபிஷேக ஆராதனை செய்வர்.

அந்தக் கடவுள் யார்? ஈ எறும்பு முதலிய உயிர் அனைத்தையும் ஆக்கினவர் அவரே. சந்திர சூரியரையும் உலகு அனைத்தையும் படைத்தவர் அவரே. உலகெலாம் அவரது அரசே நடக்கும். நம் கண்ணுக்கு அவர் தெரியார்.

குளிரும் காற்றும் நம் கண்ணுக்குப் புலப்படா; மலரின் மணமும் அப்படியே. தேனில் இருக்கும் சுவையும், வேம்பில் உள்ள கசப்பும் நாம் பார்க்க முடியா. ஆயினும் குளிர், மணம், சுவை எல்லாம் இருக்கின்றன.

பச்சை, சிவப்பு முதலிய வர்ணங்கள் செவிக்குப் புலப்படா. ஆனுல், கண்ணுக்குப் புலப்படும். சூடு, குளிர் இவை தொட்டால் புலப்படும். உலகில் உள்ள எப்பொருளும் கண், காது, மூக்கு, நாக்கு, தொடுதல் இவற்றில் ஏதாவது ஒன்றுக்கு தென்படும். அவை எல்லாம் கடவுள் படைப்பு.

அவற்றினுக்கு மேலாக நிற்பவர் கடவுள். அவற்றினுக்கு அவர் அடங்கிப் புலப்படார். அதுவே

அவரது இயற்கை. அவர் இன்றேல், உலகம் இல்லை. உலகிலே எதுவும் இயங்காது. 'அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது' என்பர்.

மண்கொண்டு பானை, சட்டி செய்வோம். பொன் கொண்டு காப்பு, கொலுசு பண்ணுவோம். மண்ணும் பொன்னும் இல்லாவிட்டால், அவற்றை எல்லாம் நாம் செய்ய முடியுமா? மண்ணும் பொன்னும் படைத்தவர் அவரே. இவற்றை நம்மால் ஆக்க முடியாது. எல்லாம் ஆக்குபவர் அவரே.

ஆண்டவனுக்கு உருவம் கிடையாது. ஆயினும் நாமோ அவருக்கு உருவம் சமைக்கிறோம். கல்லிலும் செம்பிலும் அவருக்கு வடிவம் அமைக்கிறோம். அவர் அங்கு இங்கு என்னாதபடி எங்கும் இருப்பவர். அவர் இல்லாத இடம் இல்லை.

'கடவுள் இருக்கும் இடத்தைச் சொல்லு; உனக்கு ஒரு பழம் தருகிறேன்,' என்று ஒரு பையன் சொன்னான். மற்றவனோ, 'கடவுள் இல்லாத இடத்தைச் சொல்லு; உனக்கு இரண்டு பழம் தருவேன்,' என்று பதில் சொன்னான். அவரது சக்தியும் குணமும் அளவிட முடியா.

நாம் அவரிடம் அன்புகொண்டு, அவரை மனத்தில் இருத்தி நினைத்தால், ஜோதியாக அவர் விளங்குவார். மங்கல வடிவாகவும் தோன்றுவார். அன்பரின் மனத்திலே அவர் குடிகொள்வார். பக்தருக்கு அவர் கருணை புரிவார். காட்சியும் தருவார்.

4. சைவ சமயம்

உலகிலே மனிதர் பிறக்கின்றனர் ; சிறிது நாள் சென்று இறக்கின்றனர். பிறப்பும் இறப்பும் மாறி மாறி வருகின்றன. இடையிலே மனிதர் பல துன்பங்களுக்கு ஆளாகின்றனர். பாவமும் புரிகின்றனர். எனவே, பிறவி வேண்டாம் என்பர் பெரியோர்.

காமம் அல்லது ஆசையே பிறப்புக்கு ஆதாரம். மனிதர் இறந்தால், **காலன்** கொண்டு போய்விட்டான் என்பர். கடவுள் தனது கண் அழலால் **காமனை** எரித்தார். காலனையோ, காலால் உதைத்துக் கடிந்தார். அவ்வளவு வல்லவர் ஆண்டவன்.

ஆதலினால், பிறப்பு இறப்பு இவற்றிலிருந்து விடுபட ஆண்டவனை நாம் வழிபடவேண்டும். அவனை வழிபட்டு அவனிடம் அன்பு செலுத்தி நன்னெறியுடன் வாழ்க்கை நடத்த உபாயம் உண்டு. அந்த உபாயமே **சமயம்** அல்லது **மதம்** என்பதாம்.

கடவுள் ஒருவனே. ஆனாலும் உலகை ஆக்குகையில் **பிரம்மா** என்று வடிவு கொள்வான். உலகத்தை இரட்சிக்கையில், **நாராயணன்** என்னும் நாமம் எய்துவான். உலகு அனைத்தையும் தன்னுள் அடக்கிக் கொள்கையில், **சிவனது** உருவம் மேற்கொள்வான். எனவே, மும்மூர்த்தி ஆகிறான் அவன்.

மகாவிஷ்ணுவே அல்லது நாராயணனே தெய்வம் என்போர் வைணவ சமயத்தார் ஆவர். சிவபெரு

மானே கடவுள் என்போர் **சைவ** சமயத்தினர் ஆவர். முன்னம் சொல்லிய வண்ணம், சிவனும் நாராயண னும் ஒன்றேயாம்.

வைணவர் ஸ்ரீமந் நாராயணனை நீலமேக வண் ணன் என்பர். சைவரோ, தூயவெண்ணிறம் வாய்ந்த ரிஷபவாகனனான **அரன்** என்பர் சிவபெரு மானை. மூர்த்திகள் மூவர் என்று மேலே சொன்னோம் அல்லவா ? **திருமங்கை** ஆழ்வார்

பார் - உருவி, நீர், எரி, கால், விசும்பும் ஆகிப்
பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற
ஏர் உருவில் மூவருமே என்ன நின்ற
இமயவர்தம் திரு உரு வேறு எண்ணும்போது,
ஓர் உருவம் பொன் உருவம் ! ஒன்று செந்தீ !
ஒன்று மா கடல் உருவம் ! ஒத்து நின்ற
மூவுருவும் கண்டபோது ஒன்றும் சோதி !
முகில் உருவம் எம் அடிகள் உருவம்தானே !

என்று மும்மூர்த்திகளையும் பாடி இருக்கிறார். அம் மூர்த்திகள் எங்கும் நிறைந்துளர். பலவாறான சமயமாகத் தோன்றுவர். என்றாலும், மூவருமே ஓர் உருவம். மும்மூர்த்திகளில் பிரம்மன் பொன் உரு வம். சிவபெருமான் செந்தீ வடிவம். திருமால் கடல் உருவம். மூன்று உருவும் ஒரே ஜோதி, எனது திரு மாலோ மேகத்தின் நிறம் என்கிறார் ஆழ்வார்.

திருநாவுக்கு அரசு நாயனார் என்பார், ‘ஒரு வனாய் உலகு ஏத்த நின்ற நாளோ ! ஓர் உருவே

மூவுருவம் ஆன நாளோ?' என்று கூறுவார், மேலும், அவர் உரைக்கும் பாடல் இது:—

நாராணன் காண்! நான் முகன் காண்!
நால்வேதன் காண்!
ஞாலப் பெருங்கடற்கு
ஓர் நாவாய் அன்ன
பூரணன் காண்! புண்ணியன் காண்!
புராணன் தான் காண்!
புரி சடைமேல் புனல் ஏற்ற
புனிதன் தான் காண்!
சாரணன் காண்! சந்திரன் காண்!
கதிரோன் தான் காண்!
தன்மைக்கண் தானே காண்!
தக்கோர்க்கு எல்லாம்
காரணன் காண்!
காளத்தி காணப்பட்ட
கணநாதன் காண்! அவன் என்
கண்ணுளானே!

இனி, திருவாய் மொழியில் **நம்மாழ்வார்** என்பார், ‘முனியே! நான்முகனே! முக்கண் அப்பா!!' என்று மும்மூர்த்திகளையும் அழைத்திருக்கிறார்.

சிவம் என்றால் சுபம், மங்களம், கீர்த்தி என்று பொருள். சிவபெருமானை மனமார வழிபட்டால், சிவமயமாக நாம் விளங்கலாம். **மாணிக்கவாசகர்** அவ்விதம் சிவமயமாக இருந்தார்.

5. சமண மதம்

அரசிலே பலவாறுன சட்டதிட்டங்கள் உண்டு. அவை, கால தேச வர்த்தமானத்துக்கு ஏற்றவாறு மாறும். **வேதம்** என்னும் சட்டமோ, அப்படி அன்று. எக்காலத்துக்கும் பொது ஆனது. எல்லா உயிர் களும் உய்யுமாறு ஏற்பட்டது. அது ஆதி அந்தம் இல்லாதது.

ஈசன் அஞதி. அதுபோல் அவனது சட்ட மாகிய வேதமும் அஞதியே. ஈசனது மூச்சே வேதம் என்பர் பெரியோர். மூச்சு இல்லாமல் எந்த உயிரும் நிலேக்காது. அதுபோல் வேதம் இல்லேயாஞல், ஈசன் இல்லே. ஈசன் இல்லாமல் வேதமும் இல்லே. ஆத லின் வேதமும் அஞதியாம்.

'வேதியா! வேத கிதா,' என்று **திருநாவுக்கரசு** நாயஞர் ஈசனது வடிவத்தை வருணிப்பார். வேதத் துக்கு **மறை** என்று ஒரு பெயர் உண்டு. மறைந்த பொருளே உணர்த்துவது மறை. ஈசன் எங்கும் பிர காசன். ஆயினும் கண், காது முதலியவற்ருல் அவனே அறிந்து கொள்ளமுடியாது.

மறைந்து ஆஞல் எங்கும் நிறைந்து நிற்கும் ஈசனேயும் சரி; அவனே அணுக நாம் அறிந்து கொள்ள முடியாமல் மறைந்து இருக்கும் வழியை யும் சரி; உணர்த்துவது மறை அல்லது வேதம். வேதமுறை தழைத்து ஓங்க உலகம் நன்மை அடை

யும். ஆதலின், 'வேத நெறி தழைத்து ஓங்க வேண்டும்; சைவத் துறை விளங்கவேண்டும்' என்று திருஞான சம்பந்த சுவாமிகள் கூறுவார்.

வேதத்தில் ஆசாரம் அனுஷ்டானம் என்று இருவகையான தர்மங்கள் உண்டு. ஆசாரம் என்றால் உடலுக்கும் மனதுக்கும் தெய்விகமான சுத்தியைத் தரும் நடத்தை. தமிழிலே ஆசாரத்தை ஒழுக்கம் என்பர்.

அனுஷ்டானம் என்ருல், தேவர், பிதிரர், மாதா, பிதா, குரு, பெரியோர், விருந்தினர் இவர்களுக்கு நாம் செய்யவேண்டிய சடங்குகள் அனுஷ்டானம் (வழக்கம்) எனப்படும். ஆதலால், மறை வழக்கம் என்பது வைதிக அனுஷ்டானமே. அந்த ஒழுக்கமும் வழக்கமும் நமக்கு உயிர்நிலைகள் ஆகும். அவை நமக்கு வாழ்க்கைக் கடமைகள்.

ஆதியிலே வடநாட்டில் சமண மதம் என்பது தோன்றியது. ஆதிநாதர் அல்லது ரிஷபதேவர் அதன் கர்த்தா. அன்பும் அருளும் சமணமதத்தின் ஜீவ நாடிகள். வேத நெறிக்கும் ஆதி சமண மதத்துக்கும் அதிக வேற்றுமை கிடையாது. நாளடைவில் அம்மதம் தனது உயர்வில் குன்றியது.

இடைக்காலத்தில் வந்த சமணத்துறவிகளில் ஒரு சிலர் பெண் குலத்தைப் பழித்தனர்; பெண்களை மாயப் பிசாசு என்றனர். நூறு வயது பேயுடன் வாழ்ந்தாலும், பெண் கொள்ளல் ஆகாது என்ற

னர். வேத நெறியும் சைவ சமயமுமோ பெண் களைத் தெய்வம் என்றே கருதும். சக்தியின் அம்சம் என்று சாற்றும். சக்தி இன்றேல் சிவம் இல்லை.

பெண் குலத்தை இழிவு செய்ததுடன் அவர்கள் நிற்கவில்லை. திருமணத்தை இழித்துப் பேசினர்; துறவையே பெரிது என்று போதித்தனர். இல்வாழ் வான் இல்லையானால் துறவிகளுக்கும் ஏழைகளுக்கும் உணவு கிட்டுவது எப்படி?

வேதத்தில் சொன்னபடி தேவர்களுக்காக யாகம், யக்ஞம், ஓமம் செய்தல் வேண்டும். அந்த யாகமும் ஓமமும் எதற்கு? என்று அவர்கள் சொன்னார்கள். மறை வழக்கத்தையும் ஒழுக்கத் தையும் அவர்கள் குறைத்துப் பேசினார்கள். வேதத் தையே நிந்தித்தும் பேசி வந்தார்கள்.

வேத ஒழுக்கத்தையும் வழக்கத்தையும் மேற் கொள்வதில் உடலுக்கு சிரமம் உண்டு. எனவே, சோம்பேறிகள் அந்த ஒழுக்கத்தையும் வழக்கத்தை யும் கைவிட்டார்கள். அவர்களுடன் சேர்ந்து வேத வேள்வியையும் இழிவு செய்தார்கள். அதனால், வேத நெறி குன்றியது. சைவ நெறி தளர்ந்தது. சிவபெருமானையும் பலர் மறக்கத் தலைப்பட்டனர். சமண மதம் அவ்விதம் தீங்குபுரிந்து வந்தது.

அவர்கள் அஹிம்ஸாவாதிகள்; கொல்லா விரதி கள். தரையில் நடக்கும் பொழுது, மயில் தோகை விசிறிகொண்டு வீசியபின்பே அடி எடுத்து வைப் பர். விசிறியினால் வீசி விட்டால், ஈ எறும்புகள்

அப்பால் போய்விடும். உயிர்க் கொலை நேராது என்பது அவர்கள் கருத்து.

இருட்டியபின் உண்டால், புழுப்பூச்சிகள் வாயில் புகுந்துவிடும். அதனால் பாவம் நேரும் என்று சூரியன் இருக்கும்பொழுதே மாலையில் அவர்கள் உணவு கொள்வர். வாயிலே சிறு பூச்சிகள் புகுந்துவிடும் என்று மூக்கும் வாயும் தெரியா வண்ணம் துணியால் மறைத்துக் கொள்வர்.

6. அரசியின் அருந்துயரம்

பாண்டிய நாட்டிலே சைவ சமயம் தலைசாய்ந்து சமண மதம் ஓங்கி நின்ற தருணம். நெடுமாறன் அந் நாட்டை ஆண்டு வந்தான். பாண்டியரை மாறன் என்றும் சொல்லுவர். மிகவும் உயர்ந்து இருந்த தனால், அவனை நெடுமாறன் என்றனர்.

நெடுமாறன் கூனன். ஆதலினால், கூன்பாண்டியன் என்றும் அவனை அழைப்பது உண்டு. அவன் மனைவி யின் பெயர் மங்கையர்க்கு அரசி. அந்த இருவரும் கருத்து ஒருமித்து மணம் செய்துகொண்டனர். அவர்களின் வாழ்க்கை பூவும் மணமும் போல் பொருந்தி இருந்தது, ஆதியிலே.

முதலில் நெடுமாறன் சைவனாகவே சிறந்து நின்றான். தினம் மீனாட்சி சுந்தரரின் ஆலயம் செல் வான். சோமசுந்தரக் கடவுளை நெஞ்சார வணங்கு வான். தேர் திருவிழாக்களையும் சிறப்பாக நடத்தி வந்தான். அதனால் குடிமக்கள் மனம் களித்தனர்.

நாளடைவில், அவ்வேந்தன் சமணரின் வலை யில் சிக்கினான். சிவபெருமானை அடியோடு மறந் தான். ஆலயம் போவதைத் துறந்தான். சுருங்கச் சொன்னால், சமணனாகவே ஆகிவிட்டான். அரசன் எவ்வழி, அவ்வழி குடிகள் அல்லவா? அதனால், நாட்டுமக்களில் பலரும் சமண மதத்தில் பற்று வைத்தனர்.

அரசன் தேவியான மங்கையர்க்கு அரசியோ., சுத்த சைவம். சைவநெறியும் வேத நெறியும் மங்குதல் கண்டு அவள் மனம் உடைந்தாள். வேத நெறியை மறத்தல் பாவம் என்ருள். தன் கணவனுக்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள், நயமாக. அவன் செவி சாய்க்கவில்லை.

அதனுல், அரசிக்கு அருந்துயரம் உண்டாயிற்று. சதா சமணர் சூழ்ந்து நின்று, அவனே மேலும் மேலும் போதித்து வந்தனர். அதுபற்றி அரசியின் துயரம் வளர்ந்து கொண்டே போயிற்று. தவறி நடக்கும் நாயகனே நல்வழிப்படுத்தல் மனேவியின் கடமை அல்லவா ?

அவள் முயன்று முயன்று பார்த்தாள். எல்லாம் செவிடன் காதில் சங்கு ஊதியது போல் ஆயிற்று. அவள் மீனுட்சி கோயிலுக்கு நாள்தோறும் போய் வருவாள். அந்த அம்மையின் முன் நின்று கண்ணீர் வடிப்பாள் ; கதறி அழுவாள். மாறன் மனம் மாற வேண்டும் என்று துதிப்பாள். அவள் வேறு என்ன செய்ய இயலும் ?

அந்நாட்டு அமைச்சன் பெயர் குலச்சிறை என்பது. அவனும் மகா சிவபக்தன். அரசனது நிலே கண்டு அவனும் வருந்தினுன். அரசனுக்கு முதலில் நல்லுரை கூறினுன். பின்பு, இடித்து உரைத்தான். நெடுமாறனே சமணச் சுழலில் ஆழ்ந்து கிடந்தனன்.

அவனும் தினம் தினம் ஆலயம் சென்று ஆண்டவனே வேண்டிநிற்பான். ‘மன்னவனுக்கு மதி பிறக்க வேண்டும்’ என்று சுந்தரரிடம் விண்ணப்பம் செய்து

கொள்வான். நெடுமாறன் திருந்துவதாக இல்லை. அமைச்சனும் அரசியும் சோதர சோதரியே போல் பழகி வந்தனர். இறைவனைத் திருத்த இருவரும் ஆலோசனை செய்தனர்.

ஒரு நாள் மங்கையர்க்கு அரசி தேவாலயம் சென்று, "அம்மையே! அப்பா! ஒப்பில்லா மணியே! அன்பினில் விளைந்த ஆரமுதே! அன்பு, சிவம் இரண்டு என்பர் அறிவிலார்; அன்பே சிவம் ஆவது ஆரும் அறிகிலார்; அன்பே சிவம் ஆவது ஆரும் அறிந்தபின், அன்பே சிவமாய் அமர்ந்து இருப்பாரே! இதனை எனது மணாளன் உணர வில்லையே" என்று வருந்தி உரைத்தாள்.

மேலும், "விரதம் இலா அறிவினர்கள் வேறொரு சமயம் செய்தனரே. ஆதி சமண மதம் அன்பு நெறியை விட்டு விலகியதே. யாதானும் ஒரு தெய்வம் ஒருவர் கொண்டால், அத் தெய்வமாகி உமை ஒரு பாகனார் வருவரே என்பது பொய்யோ? எனது நாதனது அறிவு சிதறியதே! என் செய்வேன்? ஞான நெறியான சைவ நெறிவிட்டு என் காந்தன் கலங்குவது அழகோ? முத்திநெறி அறியாத மூர்க்க ரோடு என் மணாளன் பழகிவருவதோ? அவனது மனமலத்தை மாற்றி, பக்திநெறியில் செலுத்துதல் உனக்கு அரிதோ?" என்றும் மங்கையர்க்கு அரசி புலம்புவாள்.

அரசியின் மனம் அழிந்தமை கண்டு அமைச்சன் மனம் சகிக்கவில்லை. சைவச் செல்வரும் சித்தம் தளர்ந்தனர். அமைச்சன் எண்ணாததெல்லாம் எண்ணி நின்றான்.

7. திருஞான சம்பந்தர்

சோழ நாட்டின் பதிகளுள் ஒன்று **சீகாழி**. அத் திருப்பதியில் வேதியர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் **சிவபாத இருதயர்**. சிவபாத இருதயர் என்ருல், எப்போதும் சிவனது பாதத்தையே மனத்தால் நினைப்பவர் என்று பொருள். அவரது மனைவியின் பெயர் **பகவதியார்**.

இருவரும் சிவபெருமானிடம் பேரன்பு வாய்ந் தவர். சிவனடியாரிடத்தும் அப்படியே. அந் நாளிலே தமிழ் நாட்டில் பௌத்த மதமும் சமண சமயமும் தலைசிறந்து நின்றன. அதனுல் வேத நெறியும் சைவ சமயமும் தலைசாய்ந்து கிடந்தன. அதுகண்டு சிவபாத இருதயர் மனம் நொந்தார்.

ஆனது பற்றி, வேதமார்க்கம் ஓங்குவதற்கு உழைக்க வல்ல ஒரு புத்திரன் பிறக்கவேண்டும் என்று விரும்பினுர்; சிவபெருமானை நோக்கித் தவமும் கிடந்தார். அதன் பலனுகவே பகவதியார் கருக்கொண்டார். நாளடைவிலே திருவாதிரைத் திருநாளில் ஒரு நன்மகன் பிறந்தான். சோதிடர் சாதகம் கணித்தனர்.

'தென்னுடு சிறக்கும்; தமிழ் ஆக்கம் அடையும்; சைவ சமயம் தழைத்து ஓங்கும்; பொய்ச் சமயங்கள் மறையும்; செம்மை நெறியே எங்கும் பரவும்; உயிர் கள் எல்லாம் உய்யும்; எல்லாம் இப்பிள்ளை பிறந்த

மகத்துவம்' என்று சோதிடர் சொல்லினர். எல்லாரும் அது கேட்டு ஆனந்தம் அடைந்தனர்.

அப் பிள்ளை பிறை என வளர்ந்து வந்தது. அதற்கு மூன்றும் ஆண்டு உற்றது. சிவபாத இருதயர் ஒருநாள் நீராடப்போனுர். மூன்று வயதுப் பிள்ளையும் அழுதுகொண்டே தொடர்ந்தது. தந்தை கோபம் காட்டினுர். பிள்ளை வீட்டுக்குத் திரும்பவில்லை. தந்தை அப்பிள்ளையை அழைத்துச் சென்றுர். பின்பு கரையில் இருத்தி நீராடப் போனுர்.

தந்தை முழுகி நீராடுகையில், கரையில் இருந்த பிள்ளை அழுதது. உடனே சிவபெருமானும் உமா தேவியாரும் ஆகாயத்தே தோன்றினர். 'பிள்ளை அழுகிறது பால் கொடு' என்றுர் பரமசிவன். பார்வதி தேவி ஒரு கிண்ணத்தில் பால் கொடுத்தாள். பிள்ளை வாய்வைத்துக் குடித்தது. அதனுல் உதட்டின் புறமெல்லாம் பால் வழிந்தது.

சிவபாத இருதயர் நீராடிவிட்டுக் கரை சேர்ந்தார்; பிள்ளையின் உதட்டிலே பால் கண்டார். 'யாருடைய எச்சில் பாலைக் குடித்தாய்?' என்று கடிந்து கேட்டார். 'பால் கொடுத்தது யார்? காட்டு' என்றும் கோபமாக வினவினுர். பிள்ளையின் கண்ணிலிருந்து ஆனந்த நீர் சொரிந்தது. 'அதோ பார், பாலைக் கொடுத்தோரை!' என்றது.

வானவீதியிலே ரிஷப வாகனத்தில் பரமசிவனும் பார்வதி தேவியும் காணப்பட்டனர். அப்

போது அந்த மூன்று வயதுப் பிள்ளை ஈசன் மீது பத்துப் பாட்டுப் பாடியது. பின்பு பார்வதியும் பரமசிவனும் சீகாழித் திருக்கோயிலுக்குள் சென்றனர். பிள்ளையும் தொடர்ந்து கோயிலுக்குள்ளே சென்றது. சிவபாத இருதயர் வியப்பு அடைந்தார்.

பார்வதியும் பரமசிவனும் அப்பிள்ளையை ஆட்கொண்டனர். அதனால் **ஆளுடைய பிள்ளையார்** என்று பெயர் வந்தது. பார்வதி தேவி ஞானப்பால் ஊட்டியதனால், **ஞான சம்பந்தர்** என்றும் பெயர் பிறந்தது. அச்செய்தி ஊரெங்கும் பரவிற்று. எல்லாரும் விரைந்து வந்து, சிவக்கொழுந்து என்று அப் பிள்ளையை வணங்கினர்.

பிள்ளையை நடக்க விட வேதியருக்கு விருப்பம் இல்லை. ஆதலின், தோளிலே சுமந்து வீட்டுக்கு எடுத்துச் சென்றார்.

பிள்ளையின் பெருமை கேட்டதும், தாயார் ஓடி வந்து, பிள்ளையை வாரி எடுத்து உச்சி மோந்து உள்ளம் பூரித்தாள். அன்று இரவு சீகாழித் **தோணியப்பர்** நினைவுடனேயே திருஞான சம்பந்தர் உறங்கினார். அதிகாலையில் எழுந்து ஆலயம் சென்றார்; அம்மையும் அப்பனுமான ஈசனை வணங்கினார்.

அது முதல் திருஞான சம்பந்தர் ஒவ்வொரு திருப்பதியாகச் சென்றார்; ஆங்காங்கு உள்ள ஈசன் மீது பாடினார். பாட்டின் சுவையும் பக்தியும் கண்டு அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர். பதிகள்

தோறும் செல்லுதலும் பாடுதலும் பக்தியைப் பரப்புதலும் அவர் தொழில் ஆயின.

திருஞான சம்பந்தர் காலால் நடந்து செல்வதைக் கண்டு பரமசிவனுக்கு மனம் பொறுக்கவில்லை. அதனுல் திருநெல்வாயில் என்னும் தலத்திலே, வேதியர் சேர்ந்து, முத்துச் சிவிகையும் முத்துக் குடையும் அளித்தனர், ஆண்டவனது கட்டளைப்படி. அவற்றை நமது பிள்ளையாரும் ஏற்றுக்கொண்டார்.

அது முதல் திருஞான சம்பந்தர் எங்கே சென்ருலும் முத்துச் சிவிகையில் அமர்ந்து செல்வதே வழக்கம். அவரது புகழும் பெயரும் எங்கும் பரவின. திருநீலகண்டநாயனும் திருநாவுக்கரசரும் வந்து அவரை வணங்கினர். சோழநாடு, கொங்குநாடு முதலிய இடங்களுக்கெல்லாம் பிள்ளையார் சென்ருர்.

சென்ற இடமெல்லாம் சைவம் தழைத்தது; வேதநெறி பரவியது. பொய்ச் சமயத்தார் எல்லாரும் அஞ்சி ஓடினர். இது செய்தி மங்கையர்க்கு அரசிக்கு எட்டியது. அமைச்சன் குலச்சிறையும் அறியவந்தான். இருவருக்கும் சற்றே நிம்மதி பிறந்தது.

8. சம்பந்தர் புகழ்தல்

தலங்கள் தோறும் திருஞான சம்பந்தர் சென்று வந்தார் அல்லவா ? ஒரு சமயம் அவர் **வேதாரண்யம்** என்னும் தலத்தில் தங்கி இருந்தார். தமிழில் **திரு மறைக்காடு** என்பர் அதனை. மங்கையர்க்கு அரசியும் அமைச்சன் குலச்சிறையும் அனுப்பிய தூதர் அத் தலம் சேர்ந்தனர்.

சேர்ந்ததும், வாயில் காப்போரை அணுகி, " நாங்கள் மதுரை அரசியும் அமைச்சனும் அனுப்ப வந்த ஒற்றர். பிள்ளையாரைப் பார்த்தல் வேண்டும்" என்றனர், அத் தூதுவர். வாயில் காப்போர் உடனே உள்ளே சென்று, பிள்ளையாருக்கு அறிவித் தனர். பிள்ளையாரும் மனம் உவந்தார்.

உவக்கவே, வாயில் காப்போர் அந்த ஒற்றரை உள்ளே அழைத்துச் சென்றனர். அவர்கள், பிள்ளை யாரின் சமூகம் சேர்ந்து தொழுதனர். சீகாழிப் பெருமான் அவர்களை அருளுடன் நோக்கினர். " மங்கையர்க்கு அரசியும் குலச்சிறையும் நலமா ?" என்று கேட்டார். " ஆம் " என்றனர் அவர்கள்.

பின்பு, பாண்டிய நாட்டிலே சமணரின் செருக்கை அவர்கள் எடுத்து உரைத்தார்கள். அவ் வேளை, அருகே இருந்த அடியார்கள் அந்த ஞான விளக்கை வணங்கினர். இப்போதே பாண்டிநாட்டி னுக்கு எழுந்தருளவேண்டும் என்று வேண்டினர்.

மேலும், '' சமணரை வென்று, சைவத்தை நிலை நாட்டவேண்டும். அரசனையும் வேத நெறியில் நிறுத்தி ஆளுதல் வேண்டும்,'' என்று வேண்டினார்கள். பிள்ளையார் அதற்கு உடன்பட்டார். பின்பு, அவர் நாவுக்கரசருக்கு அச் செய்தியை உரைத்தார். அதற்கு அப்பர் சொல்லுவார் :—

'' பிள்ளையாரே ! பொறும். சமணர்கள் பொல்லாதவர்கள். அவர்கள் வஞ்சனையில் வல்லவர்கள். நாளும் கோளும் நன்றாக இல்லை. ஆதலால், இப்போது பாண்டிநாடு போதல் தகாது.''

அது கேட்ட பிள்ளையார், '' நாம் சிவபிரானது திருவடியை நம்பி நிற்பவர்கள். நாளும் கோளும் நம்மை என்ன செய்யும் ?'' என்றார். ஈசன்மீது ஒரு பதிகம் பாடினார். பாடியதும் பாண்டி நோக்கிப் புறப்பட்டார். அவருக்கு முன்னே புறப்பட அப்பரும் ஆயத்தம் ஆனார். பிள்ளையார் வேண்டாம் என்று தடுத்தார்.

பின்னர், முத்துச் சிவிகையில் அமர்ந்து, ஆண்டவனை நினைந்து, பாண்டிநாடு நோக்கினார், பிள்ளையார். மதுராபுரி தோன்றியது. 'திரு ஆலவாய் எங்கே?' என்று அவர் வினவினார். '' இதோ ! கோபுரம் தெரிகிறது. இதுவே திரு ஆலவாய்'' என்றனர் உடன் இருந்த அடியார்கள். உடனே, பிள்ளையார் பூமியில் விழுந்து இறைவனை வணங்கினார்.

மங்கையர்க்கு அரசி! வளவர்கோன் பாவை!
வரிவளைக் கை மடமானி!
பங்கயச் செல்வி! பாண்டிமாதேவி!
பணிசெய்து நாள்தொறும் பரவப்
பொங்குஅழல் உருவன்! பூத நாயகன்!
நால்வேதமும் பொருள்களும் அருளி
அம் கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே!

இவ்விதம் பாடினார் பிள்ளையார். மங்கையர்க்கு அரசி வளவனான சோழவேந்தன் புதல்வி! கைதனில் வளையல்கள் அணிந்தவள்; எல்லாம் அறிந்தும் அறியாதவள்போல் இருப்பவள். மானமே பெரிது என நினைப்பவள்; இலட்சுமிதேவி போன்றவள்.

அன்றியும், அவள் பாண்டிய மன்னனது பெருந் தேவி. அவள் நாள்தோறும் பணிசெய்து பூசிக்கும் கடவுள் அழல் உருவம் கொண்டவன். தவிர, அவன் மண் விண் முதலிய ஐந்து பூதங்களுக்கும் தலைவன். நான்கு வேதமும் தந்தவன். பிற பொருள் களும் அருளியவன். அழகிய கயற்கண்ணி என்னும் மீனாட்சிதேவியோடு அமர்ந்து இருப்பவன். அவன் எழுந்தருளியுள்ள ஆலவாய் என்னும் தலம் இதுவே.

அவ்விதம் மங்கையர்க்கு அரசியையும் அவள் வழிபடும் ஆலவாய்ப் பெருமானையும் பாடிப் புகழ்ந்த பின்பு, அமைச்சன் குலச்சிறை என்பவனை யும் அவன் வணங்கும் சோமசுந்தரக் கடவுளையும் பிள்ளையார் புகழ்ந்து பாடிய தேவாரம் பின்வரு மாறு:

வெற்றவே அடியார் அடிமிசை வீழும்
விருப்பினன், வெள்ளை நீறு அணியும்
கொற்றவன் தனக்கு மந்திரிஆய
குலச்சிறை, குலாவி நின்று ஏத்தும்
ஒற்றை வெள்விடையன், உம்பரார் தலைவன்,
உலகினில் இயற்கையை ஒழித்திட்டு
அற்றவருக்கு அற்ற சிவன் உறைகின்ற
ஆலவாய் ஆவதும் இதுவே.

கூன்பாண்டியனை நல்வழிப் படுத்த நம் பிள்ளையார் துணிந்துவிட்டார். அது கைகூடும் என்பது அவரது உறுதி. தவிர, முன்னம் அவ் வேந்தன் சைவனாக விளங்கியவன் அல்லவா? ஆதலினால், அடியாரின் பாதம் வணங்கும் விருப்பம் உடையவன். அன்றியும் வெள்ளைத் திருநீறு பூசும் அரசன். பாண்டியனது மந்திரியான குலச்சிறை தினம் களிப்புடன் தொழும் கடவுளோ, வெண்மை நிறமான ரிஷப வாகனம் உடையவன். தேவர்களின் தலைவன். உலகிலே இயற்கையைத் தள்ளி நடப்பவரையும் காக்கும் சிவபெருமான் எழுந்தருளியுள்ள ஆலவாய் என்னும் தலம் இதுவேயாம்.

9. சமணரின் தடுமாற்றம்

மதுராபுரி நோக்கி நமது பிள்ளையார் புறப்பட்டது தான் தாமதம். மதுரைச் சீமையிலே யானை மலை, நாக மலை, நீல மலை, சுணங்க மலை, செப்பு மலை, வெள்ளி மலை, முதலிய மலைகளில் வாழும் சமணர் அனைவருக்கும் தடுமாற்றம் உண்டாயிற்று. தீக்கனுக்கள் தோன்றின.

சமணர் வழுத்தும் கோயில்கள் என்ன, அவர்கள் அமர்ந்துள்ள குகைகள் என்ன, அவர்களது தெய்வமான அருகனுக்கு உரிய அசோக மரம் என்ன, அவர்கள் கூடும் மண்டபங்கள் என்ன, இவற்றின் மீது கோட்டான் முதலிய தீய பறவைகள் வந்து அமர்ந்து, கூச்சல் போட்டன.

சமணரின் கைதனில் இருந்த மயில் பீலியும் பாயும் கைதவறி நழுவி வீழ்ந்தன. கால்கள் தடுமாறின. இடக்கண் துடித்தது. அக் கெட்ட சகுனங்கள் கண்டதும் அவர்கள் நிலைகுலைந்தார்கள் ஒருவரையொருவர் அணுகி அத் தீக்கனுக்களை உரைத்து மனம் கலங்கினர். பின்பு எல்லாரும் மதுரை சேர்ந்தனர்.

சேர்ந்ததும் ‘‘ சிவனடியார்கள் மதுரா புரியில் வந்து குவிந்துவிட்டனரே ! பாண்டிய வேந்தனும் தீயில் வீழ்ந்து எழக்கண்டோமே’’ என்று கலங்கினர். சிவக்கொழுந்தான பிள்ளை ஒருவன் வந்து நமது

பள்ளிகளையும் குகைகளையும் அழிக்கக் கண்டோமே என்று கருத்து அழிந்தனர்.

அதனுல் அவர்கள் கவலை மிகுந்து, கூன்பாண்டியனை அடைந்து, உற்றது முற்றும் உரைத்தனர். கவலை மிகுதியினுல் அவர்கள் ஊனும் கொள்ளவில்லை; உறக்கமும் கொள்ளவில்லை. துயரக்கடலில் ஆழ்ந்தவர்கள் வேறு என்ன செய்வார்கள்?

இனி, பாண்டிமாதேவியும் குலச்சிறை நாயனுரும் நல்ல குறிகளையே கண்டார்கள். அதனுல் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தார்கள். அப்பொழுது, சிலர் ஓடிவந்து, பிள்ளையாரின் வருகையை அறிவித்தனர். அந்த நற்செய்தி சொன்ன அனைவர்க்கும் சன்மானம் கிடைத்தது.

பின்பு, பாண்டிமாதேவி மனம் களித்தாள். மந்திரியை அழைத்தாள். ''நமது ஆருயிர் அமுதம் வருகிறது. ஏற்றத்துடன் எதிர்கொள்க!'' என்று கட்டளை இட்டாள். அமைச்சன் அதுகேட்டு, ''இனி நமது வேந்தனுக்கு நலமே விளையும்,'' என்று கூறி மகிழ்ந்தான். பிள்ளையாரை வரவேற்க விரைந்து சென்ருன்.

உடனே, மங்கையர்க்கு அரசி தனது நாயகனை அடைந்து, ஆலயம் சென்றுவருவதாக விடை கேட்டாள். அரசனும் நல்லது என்ருன். அவ்வாறே அரசி ஆலயம் சென்று, ஆண்டவனை வழிபட்டாள். பிள்ளையாரின் வருகையை எதிர்நோக்கி ஆவலுடன் நிற்கலானுள்.

10. பிள்ளையாருக்கு வரவேற்பு

‘பால்அறுவாயர் வந்தார், பரசமயகோளரி வந்தார், ஞான மா மணி வந்தார்’ என்று சின்னங்கள் முழங்கின. முத்துச் சிவிகையில் முத்துக் குடை நிழல் தர, பிள்ளையார் எழுந்தருளி வந்தார். முன்னும், பின்னும் அடியார் சூழ்ந்து, ‘அரஹர மஹாதேவ !’ என்று கோஷம் செய்தனர்.

எதிர்கொள்ளச் சென்ற அமைச்சன் குலச்சிறை அப்பெருங்காட்சி கண்டான். தன்னை மறந்தான். மேல் விளைவதை உணர்ந்தான். ஆனந்த பரவசம் கொண்டு, தரையில் விழுந்து செயலற்றுக்கிடந்தான். அடியார் அது கண்டனர்.

திருஞான சம்பந்தப் பெருமானை நோக்கி, “ஐயனே ! ஆருயிர் அமுதமே ! பாண்டியனது மந்திரி குலச்சிறை அடியற்ற பனைபோல் விழுந்துகிடப்பதைக் காணும்” என்று சொல்லினர். உடனே, பிள்ளையார் தமது சிவிகையை விட்டு இறங்கினார். குலச்சிறை கிடக்கும் இடம் சேர்ந்தார். தமது திருக்கையால் அமைச்சனை வாரி எடுத்தார்.

பிள்ளையாரின் மலர்க்கரம் பட்டதும், குலச்சிறை தெளிந்து எழுந்தான். அவர் முன்னே இரு கையும் கூப்பி நின்றான். பிள்ளையார் அது கண்டு அருள் சுரந்தார். “அரசியும் நீரும் எம்பெருமான் திருவருளால் நலமோ ?” என்று கேட்டார்.

உடனே, அமைச்சன் பக்தி மிகுந்து, ஞானசம்பந்தரின் பாதங்களில் விழுந்து வணங்கினன். ''முன்னம் மேன்மையுடன் இந்நாடு விளங்கி நின்றது. பின்னும் சிறப்பு அடையும். சுவாமிகள் வந்திருக்கிறீர்கள்'' என்று மகிழ்ச்சி ததும்ப மொழிந்தான்.

மேலும், ''சுவாமிகளின் வருகையால், இந்நாடு நலம் பெறும். பாண்டியனும் பெருமை பெறுவான். சைவநெறி மறுபடியும் தழைத்து ஓங்கும். தங்களது வருகை அறிந்த அரசி ஆனந்தமே அடைந்தாள். என்னை அனுப்பி, சுவாமிகளை எதிர்கொள்ளப் பணித்தாள்'' என்று கூறினன். மீண்டும் சுவாமிகளின் பாதம் பணிந்தான்.

அப்பால், பிள்ளையார் ஆலவாய்க் கடவுளைத் தொழுதவண்ணம் திருக்கோயிலுள் புகுந்தார். அப்போது, மங்கையர்க்கு அரசி ஒருபுறம் ஒதுங்கி நின்று கொண்டு இருந்தனள். பிள்ளையார் தெய்வ சன்னிதானம் சேரும் சமயம், தலைமீது கூப்பிய கையுடன் அரசி தோன்றினள். குலச்சிறை அது பார்த்து, ''இதோ ! அரசி !'' என்றனன். என்றதும், அரசிக்கு எதிரே பிள்ளையார் சென்றார்.

அப்போது அவரது திருவடிகளில் விழுந்து வணங்கினள் மங்கையர்க்கு அரசி. உடனே, தமது திருக்கரத்தால் அரசியை எடுத்தருளினர். பிள்ளையார் அருளியதும், '' ஐயனே ! எனது கருத்து முற்றுப்பெற்றது. நானும் என் பதியும் செய்த தவமே தவம் !'' என்று அரசி உரைத்து, மீண்டும் பிள்ளையாரை வணங்கினள்.

பிள்ளையார் அது கண்டு, கருணை கொண்டு, "அரசியே! சமண சமயத்தார் எவ்வளவோ இன்னல் இழைத்தும், நீர் மனம் சலிக்கவில்லை. சைவத் தொண்டை இம்மியும் வழாது ஆற்றி வருகிறீர். உம்மைக் காணவே வந்தோம். களி கூர்ந்தோம்" என்று இனிமை ததும்ப உரைத்தார்.

அன்பரின் அருள்-சொற்களை அரசி செவிமடுத்ததும் ஆனந்தமே மிகுந்தாள். மறுபடியும் திருஞான சம்பந்தரது பாதங்களில் விழுந்து வணங்கினாள். உடனே, பிள்ளையார் அத்தேவிக்கு விடை கொடுத்து அருளினார். அவ்வேளை ஆலவாய் அன்பர்களும் வந்து பிள்ளையாரை வணங்கினர். அவர்களுக்கும் அவர் அருள் சுரந்தார்.

நீலமா மிடற்று ஆலவாயிலான்
பாலது ஆயினார் ஞாலம் ஆள்வரே!

ஆடல் ஏற்றினான் கூடல் ஆலவாய்
பாடியே மனம் நாடி வாழ்மினே!

அம்பொன் ஆலவாய் நம்பனார்கழல்
நம்பி வாழ்பவர் துன்பம் வீடுமே!

அடிகள் ஆலவாய்ப் படிகொள் சம்பந்தன்
முடிவில் இன் தமிழ் செடிகள் நீக்குமே.

அவ்விதம் ஆலவாய்ப் பெருமான் **சொக்கநாதரை** அவர்பாடி மனம் மகிழ்ந்தார். அப்போது, "சமணரின் சழக்கு அகல, வேதநெறி வளர்ந்து ஓங்க, இங்கு எழுந்தருளியது இந்நகர் செய்த பாக்கியமே" என்று அன்பர் கனிந்து பேசினர்.

---

11. மடத்தில் தீ வைத்தல்

பின்பு, குலச்சிறை காட்டிய திருமடத்திலே பிள்ளையார் எழுந்தருளி இருந்தார். திருஞான சம்பந்தரின் வருகை சமணருக்கு வயிற்றிலே எரிச்சல் ஊட்டியது. சிவனடியார்களின் முழக்கமோ மயக்கமும் துக்கமும் ஊட்டியது. ஆதலின், அவர்கள் ஓர் இடத்தில் கூடினார்கள்.

'யாது செய்வது?' என அவர்களுக்குள்ளே ஆலோசனை நடந்தது. முடிவிலே, எல்லாரும் ஒன்று கூடி நெடுமாறனது அரண்மனை சேர்ந்தனர். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் அல்லவா? அவர்களது மனவாட்டத்தை அரசன் உணர்ந்தான். 'யாது செய்தி?' என்று கேட்டான்.

'சொல்லத் தகாத செய்தி' என்றனர் சமணர். 'அஃது என்ன? சொல்லுங்கள்,' என்று மன்னவன் மீண்டும் கேட்டான். சமணர் அதற்கு, 'நமது மதுராபுரியிலே இன்று சைவ வேதியர்கள் வந்துள்ளனர். அது கண்டு வருந்துகின்றோம்,' என்று பதில் சொன்னார்கள்.

அது கேட்டு, "நானும் வருந்துகிறேன்" என்றான் அரசன். பின்பு, அவன் வெகுளி கொண்டான். "அவர்கள் நம் பதிக்கு இன்று ஏன் வந்தார்கள்? அவர்கள் யார்?" என்றும் வினவினான். சமணர் சொன்னது இது :—

'' யாரோ ஒரு வேதியச் சிறுவனும். சோழவள நாட்டிலே சீகாழியில் பிறந்தவனும். சிவபெரு மானிடம் ஞானம் பெற்றவனும். அவன் முத்துச் சிவிகையில் ஏறி வந்துள்ளான். அவனுடன் ஒரு கூட் டமும் வந்திருக்கிறது. எங்களை அவன் வாதில் வெல்லப் போகிருனும்.''

அது கேட்ட அரசன், '' இதற்கு என்ன செய் வது ? சொல்லுங்கள்,'' என்ருன். சமணர், '' அச் சிறுவனை அடித்து ஓட்டுதல் கூடாது. அவன் தங்கி யுள்ள மடத்தில் மந்திரத்தால் தீ இடுவோம். இட் டால், அவன் தானே ஓடிவிடுவான் '' என்று ஒரு முகமாக உரைத்தார்கள்.

' தன் வினை தன்னைச் சுடும் ' என்பதை அவ்வேந் தன் அறியவில்லை. ஆதலின், மதி பிசகி அதற்கு உடன்பட்டான். உடனே சமணர்கள் விடை கொண்டு சென்ருர்கள். மன்னவனே, மனக் கவலை யுடன் அந்தப்புரத்தில் கிடந்தான். அதுசமயம் மங்கையர்க்கு அரசி அங்கே வந்தாள். அவளுடன் அவன் ஒன்றும் பேசவில்லை. வாளா இருந்தான்.

அரசி அது கண்டு கவலை கொண்டாள். '' என் ஆருயிரே ! ஏன் இந்த முகவாட்டம் ?'' என்று அன் புடன் கேட்டாள். அதற்கு அரசனே, சமணர் கூறி யதை உரைத்தான். தானும் அவர்களைப் போல் துயரம் கொண்டதாகக் கூறினன். அரசி அது அறிந் தாள். சிந்தனை செய்தாள்.

முடிவில் மன்னவனை நோக்கி, ''என் அரசே! என் உயிரே! இரு பாலரும் வாது செய்யட்டும். வாதிலே வெற்றி அடைபவரின் பக்கம் சார்வதே சிறந்தது. வாட்டம் விடுக கவலையும் தவிர்க,'' என்று தேறுதல் கூறினாள். வாதிலே பிள்ளையார் வெல்லுவார் என்று கருதிச்சென்றாள்.

அப்போது மந்திரி குலச்சிறை அரசியின் மாளிகை சேர்ந்தான். நடந்த அனைத்தையும் மந்திரியிடம் மங்கையர்க்கு அரசி மொழிந்தாள். அமைச்சன், '' அரசியே! இன்று பிள்ளையார் வரப் பெற்றோம். அவரையும் அடியார்களையும் காணவும் பெற்றோம். எனினும், சமணர்கள் என்ன செய்வார்களோ! அறியோம்,'' என்று கூறினான் கவலையுடன்.

அரசி அதற்கு, ''மந்திரியே! அச்சமணர்கள் நீசர்கள். தீயவை செய்ய அஞ்சார்கள். வஞ்சனை செய்வதில் அவர்கள் மிகவும் வல்லவர்கள். அவர்களின் வஞ்சனையால் பிள்ளையாருக்கு ஏதேனும் தீங்கு நேருமோ? நேர்ந்தால், நாம் இருவரும் உயிர் துறக்கவேண்டியதுதான்,'' என்றாள்.

இது இப்படி இருக்க, சமணரின் நிலை பார்ப்போம். அரசரிடம் விடைகொண்டதும், அவர்கள் நமது பிள்ளையாரின் திருமடத்தை அணுகினார்கள். அணுகி, அனல்பற்ற வேண்டும் என்று மந்திரம் செபித்தார்கள். செபித்தும் என்ன? மந்திரம் பலிக்கவில்லை. தீயும் பற்றவில்லை.

அவர்கள் திகைத்தார்கள். ''மந்திரம் பலிக்க வில்லை என்று மன்னவன் அறிந்தால், நம்மை மதி யான்; நமது வாழ்வையும் கெடுப்பான்,'' என்று அவர்கள் நடுங்கினார்கள். முடிவிலே தீக்கோல் கொண்டு, மடத்தில் தீவைக்க நினைத்தார்கள். பல சொல்லி என்ன? அவ்வாறே தீயும் இட்டார்கள்.

பிள்ளையார் தங்கியிருந்தமடத்தில் தீ பற்றியது. அது கண்ட அடியார்கள் அத் தீயை உடனே அவித்து விட்டார்கள். இது சமணர் செய்த சூழ்ச்சி, என்று அவர்களுக்குத் தெரியவந்தது. உடனே, பிள்ளை யாரிடம் சென்று, தெரிவித்தார்கள். பிள்ளையார் அது கேட்டு வருந்தினார்.

அடியார்கள் தங்கித் துயிலும் திருமடத்திலா தீ வைப்பது? என்று பிள்ளையார் இரங்கினார். ''அப்பாவிகள் என்பொருட்டே தீங்கு செய்தார் கள். ஆயினும் அது அடியார்களை எய்துமோ'' என்று எண்ணி, மனம் புண்ணுற்றார். ''இது அரசின் வழுவினால் நேர்ந்தது'' என்று கருதினார். கருதியதும்,

செய்யனே! திரு ஆலவாய் மேவிய
ஐயனே! அஞ்சல் என்று அருள்செய், எனைப்
பொய்யராம் அமணர் கொளுவும் சுடர்
பையவே சென்று பாண்டியற்கு ஆகவே!

என்று பாடினார். அத் தீயோ சுரமாக உருக் கொண்டு அரசனை அடைந்தது. பையவே சென்று என்றார்; மெதுவாகச் சென்று என்று பொருள்.

பையவே சென்று என்பதாக அவர் ஏன் சொல்ல வேண்டும்? சொல்லாமல் இருந்தால் அத் தீ முடுகிச் சென்று, மன்னவன் பாண்டியனை எரித்திருக்கும். அங்ஙனம் எரிப்பதில் அவருக்கு விருப்பம் கிடையாது. ஏன்?

பிள்ளையாரோ, மங்கையர்க்கு அரசியின் மங்கல நாணைப் பாதுகாக்க வந்தவர். அந்நிலையில், பாண்டியனை அவர் அழிக்கலாமோ? மன்னவன் மதிபிசகியே பிழை செய்தான். முன்னம் சைவனாக இருந்தான். இடையிலே சமணரின் வலையில் ஈடுபட்டான். மீண்டும் அவனை வேத நெறியில் செலுத்துவதே அவரது நோக்கம்.

12. அமணரின் அவதி

மறுதினம் பொழுது புலர்ந்தது. திருமடத்தில் சமணர் தீ இட்ட செய்தி பாண்டிமாதேவிக்கு எட்டிற்று. மந்திரி குலச்சிறையும் அதனை அறியவந்தார். முன்னம் சொல்லிய வண்ணம் நாம் உயிர் துறத்தல் வேண்டும், என்று அரசியும் அமைச்சனும் உறுதி கொண்டனர்.

அந் நிலையில், தீயால் திருமடம் பழுது ஆகவில்லை என்னும் நற் செய்தி அந்த இருவரும் கேட்டனர். கேட்டதும், மிக்க ஆறுதல் அடைந்தனர். ஆயினும். " சமணர் இன்னும் என்ன செய்வரோ ? யாது விளையுமோ ?" என்று இருவரும் மனம் கலங்கிக்கொண்டிருந்தனர்.

அப்போது, அரசனது மெய்க்காப்பாளர் மூச்சு வாங்க ஓடிவந்தனர். 'மன்னவன் கொடிய சுரத்தால் வருந்துகின்றான்,' என்று பதறி உரைத்தனர். உடனே, அரசியும் அமைச்சனும் விரைந்து ஓடினர். பாண்டியனை அடைந்தனர் ; பரிதவித்தனர்.

மணி, மந்திரம், ஔஷதம் : இவை முறை முறையே செய்யப்பெற்றன. என்றாலும், வேந்தனது வெப்பு நோய் சிறிதும் தணியவில்லை. மற்று, அந்நோயோ முன்னிலும் அதிகமாக முறுகி எழுந்தது. அதனால், நெடுமாறன் பெரிதும் வருந்தினான். அது கண்டு இருவரும் துடிதுடித்தனர்.

அவ் வேளை அரசனது அவதியைச் சமணர் கேள்வியுற்றனர். உடனே, பாண்டியனை அணைந்தனர். அவனது துயரை நீக்கவேண்டுமே. அதற்காக, மயில் பீலிகொண்டு அவனது உடலை மெல்லத் தடவினர். தடவியும் என்ன? மயில் பீலிகள் எல்லாம் எரிந்து கரிந்துபோயின. அது கண்டு சமணர் திகைத்தனர்.

பிறகு, அவர்கள் தம் கையில் உள்ள கமண்டல நீரை எடுத்தனர். ஏதோ முணு முணுத்து, மன்னவன்மீது தெளித்தனர். அது என்ன ஆயிற்று? நெருப்பில் நெய் சொரிந்தால், தீ கொழுந்துவிடும் அல்லவா? அவ்விதம் வெப்பு நோய் மிகுந்தது.

அது அறிந்தான் அரசன். சமணர்களை நோக்கினன். 'உங்களால் ஒன்றும் ஆகாது' என்ருன். 'நீங்கள் போங்கள்' என்று கூறினன். வெம்மை தாங்காமல் அமளியில் புரண்டான்; மெய் சோர்ந்தான். அறிவும் கலங்கினன்.

பாண்டிமாதேவி அது கண்டு, அவலம் அடைந்தாள். அமைச்சனை அன்புடன் நோக்கினள். முந்தின இரவு சமணர் செய்த தீங்கு இவ்விதம் முடிந்ததோ? என்று மனம் நடுங்கி வினவினள். அறிவு அழிந்த அமைச்சன் ''ஆம்'' என்ருன்.

மேலும், ''அரசியே! அத் தீங்கே இவ்விதம் முடிந்தது. அப்பாவிகள் நம் அரசனது நோயைப் போக்க முடியுமோ? போக்கப் புகுந்தால், அது முதிர்ந்து ஓங்காது என்ன செய்யும்!'' என்று

அமைச்சன் மனம் கசிந்து கூறினன். அரசியும் உள்ளம் உருகினாள்.

பின்பு, இருவரும் மன்னவனை நோக்கி வணங்கி உரைப்பாராயினர் :—'' அரசே! ஞானசம்பந்தர் தங்கியிருந்த திருமடத்திற்கு இச் சமணர் தீ இட்டனர். அத் தீயே வெப்பு நோயாக உம்மை வருத்துகின்றது. இவர்களது மந்திரங்கள் பலிக்கவில்லை. பிறவும் பயன் இல்லாமற்போயின. ஞானசம்பந்தர் இங்கே எழுந்தருளினுல் வெப்பு நோய் பறக்கும். பிறவி நோயும் மறைந்து போகும்.''

அவ்விதம், இருவரும் கூறியதை அரசன் பரிவுடன் கேட்டான். ஞானசம்பந்தர் என்னும் நாமம் அவன் செவியில் நுழைந்ததுதான் தாமதம். அவனது அயர்வு சிறிது நீங்கியது. சமணரின் தீச் செயலே நோய்க்குமூலம் என்று அவன் எண்ணினன்.

எண்ணியதும், அரசியையும் அமைச்சனையும் ஆர்வமுடன் நோக்கினன். '' நீங்கள் விரும்பினுல் ஞானசம்பந்தரை அழைத்துவரலாம்,'' என்றுன். '' என் நோயை யார் தீர்ப்பாரோ, அவரது பக்கம் நான் சேர்வேன். நிச்சயம் இது,'' என்று கூறினன்.

அச்சொல் காதில்பட்டதுதான் தாமதம். மங்கையர்க்கு அரசியும் குலச்சிறையும் ஆனந்தம் எய்தினர். பின்பு, இருவரும் அங்கே தாமதிக்கவில்லை. பிள்ளையாரின் திருமடத்துக்கு விரைந்து போயினர். போனதும் அவரது பாதங்களில்

விழுந்து வணங்கினர். ''அடைக்கலம்! அடைக் கலம்!'' என்றனர்.

திருஞானசம்பந்த சுவாமிகள் அது கேட்டார். 'ஏதேனும் தீங்கு நேர்ந்ததோ?' என்று கனிவுடன் வினவினர். பாண்டியனுக்கு வெப்பு நோய் நேர்ந் ததை இருவரும் வருந்தி உரைத்தனர். சமணரால் நோயைத் தணிக்க முடியவில்லை என்றும் விளங்க உரைத்தனர். ''அடிகள் எழுந்தருளி எங்களையும் மன்னவனையும் காப்பற்ற வேண்டும்'' என்று வேண் டிக் கொண்டனர்.

'' நீங்கள் சிறிதும் அஞ்சவேண்டாம். அச் சம ணரை வெல்வோம். மன்னவன் பாண்டியனை வேத நெறியில் புகுத்துவோம். அவனை மீண்டும் திருநீறு அணியச் செய்வோம். கவலை விடுக. துயரம் தீர்க'' என்று பிள்ளையார் அருள்செய்தார்.

ஞானத்தின் திரு உருவை, நான்மறையின் தனித்துணையைத்
வானத்தின்மிசை அன்றி மண்ணில் வளர் மதிக்கொழுந்தைத்
தேன் அக்க மலர் கொன்றைச் செஞ்சடையார் சீர்த்தொடக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண் களிப்பக் கண்டோம்.

என்று அந்த இருவரும் மகிழ்ந்து மாளிகை திரும்பினர். திருஞானசம்பந்தர் அப்பாண்டியனது அரண்மனை சேர எண்ணினர். முதலில் சிவபெருமா னது அருளை அடைய விரும்பினர். உடனே, சொக்கநாதரின் திருக்கோயில் சென்றார். சிவ பெருமானைத் தொழுதார். சமணருடன் வாது புரிய உத்தேசம் என்றார். பின்வருமாறு பாடினர் :—

வேத வேள்வியை நிந்தனை செய்து உழல்
ஆதம் இல்லி அமணொடு தேரரை

வாதில் வென்று அழிக்கத் திரு உள்ளமே
பாதி மாது உடன் ஆய பரமனே !

ஞாலம் நின்புகழே மிக வேண்டும், தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே !

தென் ஆலவாயில் உறையும் ஆதி பகவனே! உலகம் நின்புகழையே மிக வேண்டி நிற்கின்றது. சமணரோ, வேத வேள்வியை நிந்தனை செய்து திரிகின்றனர். ஆதலின், அவர்களை வாதில் வென்று அழிக்கப் போகின்றேன். உமாதேவியை இடது பாகத்தில் கொண்டுள்ள பரமசிவனே! உனது அருள் வேண்டும். உனது திரு உள்ளத்தை எதிர் நோக்கி நிற்கின்றேன்.

பிள்ளையார் அவ்விதம் சிவபெருமானை வேண்டிக் கொண்டார். அவனது அருளை அடைந்தார். அதனால் மகிழ்ச்சி மிகுந்தார். மிகுந்ததும் ஈசனது விடைகொண்டு, அடியார் சூழ்ந்துவர, நெடுமாறனது அரண்மனை வாயில் குறுகினர். அவரது வருகையை வேதகோஷம் முன் சென்று அறிவித்தது.

13 சமணர் சாய்தல்

பிள்ளையாரின் வருகை தெரிய வந்தது. மங்கையர்க்கு அரசியும் குலச்சிறையும் அவரை அரண்மனை வாயிலில் வரவேற்றனர். பின்பு, குலச்சிறை முன்னே சென்ருன். பிள்ளையார் தொடர்ந்தார்; அரசியோ பின்னே வந்தாள். முன் சென்ற அமைச்சன் விரைந்து, பாண்டிய வேந்தனை அடைந்தான்.

அடைந்ததும், ஞானசம்பந்தரின் வருகையை அரசனுக்கு அறிவித்தான். அது கேட்டதும், அரசனது துயரம் சிறிது நீங்கியது. உடனே, தனது தலைமாட்டில் பொன் பீடம் அமைக்கச் சொன்னுன், பின்பு சுவாமிகளை எதிர் கொள்ள அமைச்சனுக்கு ஆணை இட்டான்.

அவ்விதமே குலச்சிறை சென்று, பிள்ளையாரை எதிர்கொண்டான். இவ்வளவையும் சமணர் பார்த்துக் கொண்டே இருந்தனர். அவர்களுக்கு மனத்துயரம் அதிகரித்தது. நமது சமயத்தை அரசன் கைவிடுவான், என்று அன்னவர் மிகவும் அஞ்சினர்.

பின்பு, அரசனை நோக்கி, எங்கள் தலைவ! சமண மதம் உமது அறநெறி. அதனை நீரே காத்தருள வேண்டும். ஒரு சிறுவனை இங்கே அழைத்திருக்கிறீர். நோயை அகற்றும் பொறுப்பை எங்கள் இருவருக்கும் வழங்குக. பிள்ளையே நோயை முற்றிலும் தீர்த்தாலும், நாங்கள் தீர்த்ததாக நீர் சொல்லுதல் வேண்டும், என்று அன்னுர் குறையிரந்தனர்.

அதற்கு, அரசன், ''சமணரே! நான் வஞ்சகம் பேசமாட்டேன். நீங்கள் இருவரும் உங்களது தெய்வ வல்லமை காட்டி, எனது நோயை அகற்றுதல் வேண்டும்'' என்ருன். சமணர் அச்சொல் கேட்டதும், மனம் சோர்ந்தனர். மயங்கித் தயங்கி நின்றனர்.

இதற்குள், சமண இருளை நீக்க வந்த சிவசூரியன் அங்கே தோன்றினுர். முத்துச் சிவிகை விட்டு இறங்கினுர். அரசனது அறைக்குள் நுழைந்தார். அவரை நெடுமாறன் நோக்கினுன்; கைகூப்பி வணங்கினுன்; தனது தலைமாட்டில் உள்ள பொன் ஆசனத்தைக் காட்டினுன். பிள்ளையார் அப்பீடத்தில் அமர்ந்தார்.

சமணருக்கோ திகில் உண்டாயிற்று. பிள்ளையாரைக் கண்டதும், பாண்டியனது நோய் இன்னும் சிறிது தணிந்தது. அவரை நோக்கி, ''உமது பதி யாது?'' என்று அவன் வினவினுன். சுவாமிகளோ, ''பிரமனூர் வேணுபுரம்'' என்னும் பதிகம் பாடி அருளினுர்.

சூழ்ந்து நின்ற சமணருக்கு மனம் பொறுக்கவில்லை. அதனுல், அவர்கள் பொங்கி எழுந்தார்கள். தங்கள் நூல்களில் உள்ளதை எடுத்துக் கூறி ஆரவாரம் செய்தார்கள். பிள்ளையார் சிறிதும் துணுக்கம் எய்தவில்லை. அமைதியாகவே இருந்தார்.

அந்த அமைதி சமணருக்குக் கோபம் மூட்டியது. அவர்கள் வாயில் வந்தது வார்த்தை என்று

ஏதேதோ பேசினர்கள். பிள்ளையாரையும் நெருங்கினர்கள். மங்கையர்க்கு அரசி, அது கண்டு திடுக்கிட்டாள். நடுக்கம் கொண்டாள். அரசனை நோக்கி,

"என் தலைவ! ஞானசம்பந்தர் சிறு வயது உடையவர். இளந் திருமேனி கொண்டவர். சமணர்களோ, பலர். சரீர வலி படைத்தவர்கள். உமது, பிணியை அகற்ற, நமது பிள்ளையாரை விடும். சமணர் வல்லவர் ஆனுல், வாதம் செய்து பார்க்கட்டும்" என்று துயரும் பரிவும் ததும்பப் பேசினள்.

அதற்கு மன்னவன் "என் அரசியே! நீ வருந்தாதே. இனி என்ன வாது இருக்கிறது?" என்று சொன்னன். உடனே, சமணரை நோக்கி, "நீங்களும் இவரும் எனது நோயை அகற்றுங்கள்; உங்களது தெய்வ வல்லமையை நிலை நிறுத்துங்கள்" என்றான்.

அப்பொழுது ஞானசம்பந்தர் வாளா இருக்கவில்லை. அரசியின் கவலை நிலையை உணர்ந்து கொண்டார். அரசிக்கு ஆறுதல் கூற எண்ணினர்.

மானின் நேர் விழி மாதராய்!
வழுதிக்கு மாபெருந்தேவி! கேள்:
'பானல்வாய் ஒரு பாலன், ஈங்கு இவன்'
என்று நீ பரிவு எய்திடேல்!
ஆனைமாமலை ஆதி ஆய
இடங்களில் பல அல்லல் சேர்
ஈனர்கட்கு எளியேன் அலேன்!
திரு ஆலவாய்அரன் நிற்கவே!

மான் போன்ற விழியுடைய மாதே! பாண்டியனது பெருந்தேவியே! நான் சொல்வதைக் கேள். பால் மணம் மாருத பாலன் யான், என்று நீ வருந்தாதே! ஆனைமாமலை முதலிய மலைகளில் வசித்து, அல்லல் பல செய்யும் ஈனரான சமணரைக் கண்டு நான் அஞ்சிவிடேன். ஏன் என்ருல் திரு ஆலவாயில் எழுந்தருளியிருக்கும் அரன் எனக்கு உற்ற துணையாக இருக்கிருன்.

அவ்விதம் கருத்து அமைந்த பாடலைக் கூறி, அரசிக்குத் தைரியம் ஊட்டினுர் பிள்ளையார். உடனே, பாண்டியன் அச் சமணரை நோக்கி, ''எனது வெப்பு நோயை நீங்கள் தீருங்கள். தீர்த்தால், நீங்களே வெற்றி பெற்றவர் ஆவீர்,'' என்று சொன்னுன் எடுப்பாக.

உடனே, சமணர்கள் சிறிது தைரியம் அடைந்தார்கள். ''நாங்கள் இடது பக்கத்து நோயைத் தீர்ப்போம்'' என்ருர்கள். பாண்டியன் நெடுமாறனையும் அணுகினுர்கள். தங்கள் தெய்வமான அருகன் நாமத்தை உரக்க உரைத்தார்கள். மயில் பீலியினுல் அரசனது இடது பாகத்தைத் தடவினுர்கள்.

தடவியும் என்ன? வெப்பம் முன்னிலும் அதிகமாகி வருத்தியது. பாண்டியன் அதனை ஆற்ற முடியவில்லை. புழுப்போல் துடித்தான்; அழுதான்; அரற்றினுன். வேறு என்ன செய்வான்? அரசியும் அமைச்சனும் மிக்க வருத்தம் அடைந்தனர். சமணரோ ஏதும் செய்ய இயலாமல் விழித்து நின்றனர்.

14. சம்பந்தரின் வெற்றி

வெப்பு நோய் தாங்க முடியவில்லை. படுக்கையிலே பாண்டியன் புரண்டு புரண்டு துடித்தனன். அரசி ஆறாத் துயர் கொண்டு, ஞானசம்பந்தர் முகம் நோக்கினாள். அவ்வேளை கூன் பாண்டியனும் பிள்ளையாரைப் பார்த்தான், பதைப்பு மேலிட்டு. உடனே, அவர் சொக்கநாதனை நினைந்தார்.

மந்திரம் ஆவது நீறு! வானவர் மேலது நீறு!
சுந்தரம் ஆவது நீறு! துதிக்கப் படுவது நீறு!
தந்திரம் ஆவது நீறு! சமயத்தில் உள்ளது நீறு!
செந்துவர் வாய் உமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறே!

வேதத்தில் உள்ளது நீறு! வெந்துயர் தீர்ப்பது நீறு!
போதம் தருவது நீறு! புன்மை தவிர்ப்பது நீறு!
ஓதத் தருவது நீறு! உண்மையில் உள்ளது நீறு!
சீதப்புனல் வயல் சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே!

முத்தி தருவது நீறு! முனிவர் அணிவது நீறு!
சத்தியம் ஆவது நீறு! தக்கோர் புகழ்வது நீறு!
பத்தி தருவது நீறு! பரவ இனியது நீறு!
சித்தி தருவது நீறு! திரு ஆலவாயான் திருநீறே!

பூச இனியது நீறு! புண்ணியம் ஆவது நீறு!
பேச இனியது நீறு! பெருந் தவத்தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு! அந்தமது ஆவது நீறு!
தேசம் புகழ்வது நீறு! திரு ஆலவாயான் திருநீறே!

அவ்விதம் பத்துப் பாடல் பாடினார் பிள்ளையார். திருநீறு கொண்டு அரசனது வலது பக்கத்தில் தடவி

னூர். தடவியதும் அரசனது வலது பக்கத்தில் நோய் தீர்ந்தது. அந்த இடம் பொய்கை போல் குளிர்ந்தது. ஆனல், வலது பக்க நோய் இடது பக்கத்தில் புகுந்து பெருகிற்று. வெம்மை தாங்க முடியவில்லை.

அதனுல், சமணரின் பீலிகள் எரிந்து கரிந்தன. வெப்பம் அலைபோல் வீசிற்று. அந்த அனல் சமணர் களையும் தாக்கிற்று. அவர்கள் தாங்க முடியாது ஓடி ஒதுங்கினுர்கள். ''ஒருபக்கம் நரகத் துன்பம், ஒரு பக்கம் பேரின்பம். இது என்ன அதிசயம்!'' என்று பாண்டியன் நெடுமாறன் பெரிதும் நொந்தான்.

பின்பு, ''அவன் நீங்கள் தோற்றீர்கள். போங் கள் இந்த இடம் விட்டு,'' என்று சமணர்களை நோக்கி உரைத்தான். அப்பால் பிள்ளையாரைப் பார்த்து, ''ஐயனே! இடது பக்கத்துக்கும் அருள் செய்க,'' என்று மிகவும் வேண்டிக் கொண்டான்.

உடனே, அவர் திருநீறு கொண்டு, இடது பக்கத்தையும் தடவினுர். அதுவும் குளிர்ந்தது. கூன் பாண்டியன் பிழைத்தான். மங்கையர்க்கு அரசியும், குலச்சிறையும் அளவிலா ஆனந்தம் அடைந்தனர். இருவரும் பிள்ளையாரின் பாதங் களில் விழுந்து வணங்கினர். ''பெரும்பேறு பெற் ருேம்'' என்றனர். பாண்டியனும் எழுந்து, 'பிழைத்தேன்' என்று பணிந்தான்.

பிள்ளையாரின் பெருமையை அச் சமணர் கண்டு கொண்டனர். ஆந்தைபோல் விழித்தனர். தர்க்

கம் புரிந்து, பிள்ளையாரை வெல்லமுடியாது, என்று அறிந்தனர். வேறு உபாயம் கருதிச் சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தனர். "யாது சிந்தனை?" என்று வினவினார் திருஞான சம்பந்தர்.

சமணர்கள் அதற்கு "இனிமேல் தர்க்கவாதமும் வேண்டுவதில்லை. நமது சமய உண்மைகளைச் செய லில் காட்டுவதே சிறப்பு," என்றனர். அப்போது, மன்னன் அச் சமணர்களைப் பார்த்தான். "எனக்கு உற்ற நோயை உங்களால் நீக்க முடியவில்லை. தோற்றேபோனீர்கள். இனி உங்களால் என்ன ஆகும்?" என்று கடிந்து கேட்டான்.

அதற்கு அவர்கள் சொல்வர் :—"நாங்கள் இருவரும் எங்களது சமய உண்மைகளை ஏட்டில் எழுதுவோம். அதனை நெருப்பில் இடுவோம். எந்த ஏடு தீயில் வேகாமல் இருக்கிறதோ, அந்த ஏட்டி னுக்கு உரியவரே வெற்றியாளர் ஆவர்."

அதற்கு நெடுமாறன் பதில் சொல்ல எண்ணி னான். அதற்குள் பிள்ளையார், "நல்லது வேந்தன் முன்னிலையில் நீங்கள் சொல்லியவாறே செய் வோம்," என்று கூறினான். அரசனது முன்னிலையில் தீ வளர்க்கப்பட்டது.

திருஞானசம்பந்தர் தாம் பாடிய தேவார ஏடுகளை எடுத்தார். கயிற்றை அவிழ்த்தார். ஏடு களை மறித்தார். ஒரு பதிகத்தை எடுத்தார். ஆண்டவனை வேண்டி அதனை எரிகிற நெருப்பில்

போட்டார். சமணரும் தங்கள் சமய உண்மைகளை ஏட்டில் எழுதி நெருப்பில் இட்டனர், கவலையுடன்.

இட்டதும், அந்த ஏடு எரிந்து சாம்பலாயிற்று, பிள்ளையாரின் ஏடு பழுதுருமல் இருந்தது. அதனை அவர் எடுத்தார். அது பசுமையும் புதுமையும் நிரம்பி விளங்கிற்று. அவர் அந்த ஏட்டினை எல்லாருக்கும் காட்டினார். பின்பு, பழையபடி ஏடுகளுடன் சேர்த்துக் கட்டிக்கொண்டார். அது கண்ட கூன் பாண்டியன் வியப்பு அடைந்தான்.

பின்னர், நெடுமாறன், ‘‘உங்கள் ஏட்டை எடுங்கள்’’ என்று சமணரை நோக்கி உரைத்தான். அவர்கள் ஏட்டை எடுக்க நெருங்கினர். தீயோ கொழுந்துவிட்டு எரிந்தது. தண்ணீர் கொண்டு, எரியை அவித்தான் அரசன். ஏட்டைச் சமணர் தேடித்தேடிப் பார்த்தனர்.

அவர்கள் என்ன கண்டார்கள்? சாம்பலையும் கரியையுமே கண்டார்கள். அதனால், மனம் வருந்தி அவர்கள் திகைத்தார்கள். சாம்பலைப் பிசைந்து பிசைந்து பார்த்தார்கள். தூற்றித்தூற்றியும் பார்த்தார்கள். அரசனுக்குச் சிரிப்பு வந்தது. அதனை அவன் அடக்க முடியவில்லை.

அவர்களை நோக்கி, ‘‘இன்னும் நன்றாக அரித்து அரித்துப் பாருங்கள். பொய்யை மெய்யாக்கப் புகுந்தவர்களே! போங்கள்! போங்கள்! முன்னும் தோற்றீர்கள். பின்னும் தோற்றீர்கள். இன்னுமா தோற்கவில்லை?’’ என்றான் அவன்.

மன்னவனை நோக்கி அச்சமணர் சொல்லுவர் :- ‘‘முன்னே இருமுறை நாங்கள் முனைந்து முயன்

ளோம். நாங்கள் தோற்றுப் போனோம். இனியும் ஒரு முறை முயல்வோம். மூன்றாவது முறையில் வெற்றி பெறுவோம். நிச்சயம் இது.''

மன்னவன் அது கேட்டு, ''இது என்ன வார்த்தை?'' என்றான். திருஞானசம்பந்தர் அது கண்டு மனம் இளகினார். சமணரைப் பார்த்து, ''நீர் என்ன வாது செய்ய நினைவு?'' என்று கேட்டார். சமணர்கள், ''புனல் வாதம் செய்வோம். நமது சமய உண்மைகளை ஏட்டில் எழுதுவோம். அதனை வையை நதியில் விடுவோம். நீரிலே எதிர் நோக்கி வரும் ஏடே ஏற்றம் உடையது,'' என்று உரைத்தார்கள்.

பிள்ளையார் ''நல்லது'' என்றார். அப்போது, ''இந்த வாதில் தோற்றவர்களை என்ன செய்வது? அதை முடிவு செய்துகொண்டே வாதில் இறங்க வேண்டும்,'' என்றான் அமைச்சன் குலச்சிறை. அது கேட்டனர் சமணர். அவர் மீது கோபமும் பொறாமையும் கொண்டனர். அவனை ஏற இறங்க நோக்கினர். அவர்கள் வாய் தவறியது.

ஆதலினால், ''நாங்கள் தோற்றோமானால், எங்களை வேந்தன் நெடுமாறன் கழுவில் ஏற்றலாம்,'' என்று கூக்குரல் போட்டனர். மன்னவன் அது அறிந்து, சமணர்களை நோக்கினான். கோபமும் பொறாமையும் பூத்து இவ்விதம் கூறினீர்களே,'' என்று வருந்தி உரைத்தான். பல சொல்லி என்ன! புனல் வாதத்தின் முடிவை அடுத்த அத்தியாயத்தில் பார்க்கலாம்.

---

15. புனல் வாதம்

நெருப்பிலே ஏட்டை இட்டு, **அனல் வாதம்** செய்தனர் சமணர். அதில் படுதோல்வி அடைந்தனர். ஆயினும், 'ஆசை வெட்கம் அறியாது' என்பது பழமொழி அல்லவா ? நீரிலே ஏட்டை விட்டுப் **புனல் வாதம்** செய்ய அச் சமணர் விரும்பினர்.

தோற்றவர் தோலார் என்பது ஒரு வசனம். தோற்றுப் போனாலும், வாய்ப்பந்தல் போட்டு வரிசை காண விரும்புவோர் உண்டு. சமணர் அத்தகைய நிலையினர். ஆதலின், புனல் வாதத்திலே அவர்கள் பிடிவாதமாக இருந்தார்கள். கூன்பாண்டியனும் நல்லது என்றான். வையைக்குப் புறப்பட்டான்.

மக்கள் அனைவரையும் வையைக்கு வர ஆணை இட்டான் அவன். அவ்வாறே எல்லாரும் வையையின் கரையை அடைந்தனர். இரு சாராரையும் அவன் நோக்கினான். '' உங்கள் ஏடுகளை வையையில் விடுங்கள்,'' என்றான்.

ஆசை அவர்களை விடவில்லை. அறியாமையும் அவர்களை அடிமைகொண்டு நின்றது. ஆதலினால், தங்களது ஏட்டை வையையில் விட்டார்கள். அது எதிர் ஏறிவரவில்லை. கடல் நோக்கி வெள்ளத்தோடு வெள்ளமாக ஓடிவிட்டது.

பின்பு, திருஞானசம்பந்த சுவாமிகளை நோக்கினான் நெடுமாறன். '' உமது ஏட்டை விடும் ;

விளைவதை நோக்கலாம்,'' என்றான். சுவாமிகள் உடனே ஆலவாய்க் கடவுளை எண்ணினார்.

வாழ்க அந்தணர்! வானவர்! ஆன் இனம்!
வீழ்க தண்புனல்! வேந்தனும் ஓங்குக!
ஆழ்க தீயது எல்லாம்! அரன் நாமமே
சூழ்க! வையகமும் துயர் தீர்கவே!

அன்பும் அருளும் வாய்ந்த வேதியர் வாழ்க! வானத்தில் வசிக்கும் தேவர்கள் வாழ்க! பசுக் கூட்டங்கள் வாழ்க! மாதம் மும்மாரி பொழிக! வேந்தன் நெடுமாறனும் ஓங்குக! தீயன எல்லாம் அழிந்து ஒழிக! சிவனது நாமமே எங்கும் நிரம்புக. அதனால், உலகின் துயரமும் நீங்குக.

அக் கருத்து அமைந்த பத்துப் பாடல்கள் பாடினார்; அவற்றை வையையிலே விட்டார் பிள்ளையார். உடனே, அந்த ஏடு எதிர் நோக்கியது. நீரைக் கிழித்துக் கொண்டு முன்னே சென்றது. அந்த ஏட்டை எடுக்க அமைச்சன் குதிரை மீது சென்றான்.

ஏடோ, நில்லாமல் எதிர் நோக்கி ஏறிக் கொண்டே போயிற்று. பிள்ளையார் அது அறிந்தார். வேறு ஒரு பதிகம் (பத்துப் பாடல்) பாடினார். பாடவே, திருவேடகம் என்னும் தலத்தின் ஆலயத்துக்கு அருகில் ஏடு தேங்கி நின்றது அசையாமல்.

குலச்சிறை அது கண்டு, நீரில் இறங்கினான்; இறைவனைத் தொழுது ஏட்டை எடுத்தான்; கரை ஏறினான்; பிள்ளையாரிடம் வந்தான்; அவரைப் பணிந்தான். அந்த ஏட்டை எல்லாருக்கும் காட்டி

னுன். அனைவரும் அதிசயம் அடைந்தனர். சமணரோ, தலை குனிந்து செருக்கு நீங்கி, அறிவு அழிந்து நின்றனர்.

மன்னவன் அச் சமணர்மீது ஆத்திரமே கொண்டான். "இவர்கள் முன்னம் பிள்ளையாருக்குக் கேடு சூழ்ந்தார்கள். திருமடத்தில் தீ இட்டார்கள். எனது வெப்பு நோய் தீர்க்க முடியாமல் தவித்தார்கள். அனல் வாதம், புனல் வாதம் இரண்டிலும் தோற்றார்கள். இவர்கள் முன்பே ஒப்பினார்கள். அதன்படி இவர்கள் கழுவில் ஏற வேண்டும்," என்றான்.

ஆங்கு இருந்த எண்ணாயிரம் சமணரும் மகா மானிகள். ஆதலின், " நாங்களே ஏறுகின்றோம் " என்று கழுமரத்தில் ஏறினார்கள். சமணரின் கொட்டம் இத்துடன் தீர்ந்தது. எல்லாரும் களிப்பு எய்தினர். மங்கையர்க்கு அரசி ஆனந்தம் அடைந்தாள்.

திருஞானசம்பந்தர் அந்த அரசனை அருகே அழைத்தார். அன்புடன் திருநீறு கொடுத்தார். பக்தி விசுவாசத்துடன் வாங்கி, அரசன் பூசிக் கொண்டான். அவனது கூன் நிமிர்ந்தது. **நின்ற சீர் நெடுமாறன்** என்று அவன் புகழ்ப் பெயர் கொண்டான்.

பெரியாரின் வாக்கு பொய்க்காது. 'வேந்தனும் ஓங்குக' என்று பிள்ளையார் பாடினார் அல்லவா ? துன்பமும் துயரும் தீர்ப்பது திருநீறு அன்றோ ?

திருநீறு பூசியதும் பாண்டியனது உடல் குற்றம் நீங்கியது. அது கண்டு அரசிக்கு ஆனந்த பரவசம் உண்டாயிற்று. அமைச்சன் குலச்சிறைக்கும் அப்படியே.

தென்னவனும் அவன் தேவியும் நன்னெறி அமைச்சனும் திரு ஞானசம்மந்த சுவாமிகளின் பொன்னடியை வணங்கினர், மனம் உவந்து அப்பெருமானைப் போற்றினர். பிள்ளையார், நேரே ஆலயம் சென்றார். அரசனும் பிறரும் பின் தொடர்ந்தனர்.

வீடல் ஆலவாயிலாய்! விழுமியார்கள் நின்கழல்
பாடல் ஆலவாயிலாய்! பரவ நின்ற பண்பனே
காடல் ஆலவாயிலாய்! கபாலி! நீர்கடிமதில்
கூடல் ஆலவாயிலாய்! குலாயது என்ன கொள்கையே!

குற்றம் நீ! குணங்கள் நீ! கூடல் ஆலவாயிலாய்!
சுற்றம் நீ! பிரானும் நீ! தொடர்ந்து இலங்கு சோதி நீ!
கற்றநூல் கருத்தும் நீ! அருத்தம் இன்பம் என்று இவை
முற்றும் நீ! புகழ்ந்து முன் உரைப்பது என் முகமனே!

அவ்விதம் ஆலவாயில் கடவுளை ஞானசம்பந்தர் பாடிப் புகழ்ந்தார். தென்னவனும், ''திரு ஆலவாய், மேவும் மன்னனே! அமணர் தங்கள் மாய்கையால், நான் மயங்கி நின்றேன். உன்னை அறியாது உழன்றேன். கொடியபிணி கொண்டேன், என்னை ஈடேற்ற இப் பிள்ளையாரைத் தந்தாய். என்னே உன் கருணை!'' என்று பலவாறு துதித்துப் புகழ்ந்தான்.

இதற்கு இடையில், மதுராபுரி வாசிகள் வாளா இருக்கவில்லை. சமணரின் குகைகள் என்ன ! அருகன் உறையும் இடம் என்ன! இவற்றை எல்லாம் பறித்து எறிந்தனர். அந்த இடங்களில் எல்லாம் சைவ மடங்களை எழுப்பினர். பஜனைக் கூடங்கள் சமைத்தனர்.

வைதிக சூளாமணியை, மாதவத்தோர் பெரு வாழ்வை, முக்கண்ணனது அருள் பெற்ற பிள்ளையாரை, மீண்டும் அம்மூவரும் பணிந்தனர். அவரது அருள்பெற்று விடையும் கொண்டு, தமது மாளிகைக்கு ஏகினர். பிள்ளையாரும் தமது திருமடத்துக்கு எழுந்தருளினர்.

16. தல யாத்திரை

பிள்ளையார் சிறிது காலம் மதுராபுரியில் தங்கி இருந்தார். பாண்டியனும் அவன் தேவியும் அமைச்சனுடன் தினம் தினம் திருமடத்துக்குப் போவர். திருஞானசம்பந்தரைக் கண்குளிரக் காண்பர். கருத்து மலர்வர். பிள்ளையாரை வணங்குவதில் ஓர் இன்பம் காண்பர்.

பிள்ளையாரின் தந்தையான சிவபாத இருதயருக்கு மைந்தன்மீது ஆர்வம் பெருகியது. மதுராபுரியிலே பிள்ளையாரின் பெருமையை நேரில் அறிய ஆவல் உதித்தது. உடனே, சீகாழியிலிருந்து புறப்பட்டார். பாண்டி நாடு அடைந்தார். மதுராபுரி சேர்ந்தார்.

சேர்ந்ததும், சொக்கநாதனது ஆலயம் புகுந்தார்; ஆண்டவனைத் தொழுதார். பின்னரே, பிள்ளையாரின் திருமடம் சென்றார். அவரைக் கண்டதும், பிள்ளையாருக்குத் தோணியப்பரின் நினைவு தோன்றியது. உடனே, அப்பெருமான்மீது ஒரு பதிகம் பாடி மகிழ்ந்தார்.

சிறிது நாள் சென்றது. பாண்டி நாட்டின் பல தலங்களையும் தரிசிக்க ஞானசம்பந்தர் ஆசை கொண்டார். கொள்ளவே, மதுராபுரியை விட்டுப் புறப்பட்டார். அதுசெய்தி அரசன், அரசி, அமைச்சன், ஆகிய மூவரும் அறிந்தனர். அவரை

விட்டுப் பிரிய அம்மூவருக்கும் மனம் இல்லே. கண் ணீரும் கம்பலேயுமாக நின்றனர்.

பின்பு, பிள்ளேயாரின் பாதத்தைப் பற்றிய வண்ணம் பூமியில் கிடந்தனர். பிள்ளேயார் என்ன செய்வார்? அவர்கள் அன்புடன் நோக்கினுர். ''இந் நாட்டிலுள்ள திருப்பதிகளேத் தொழ என் னுடன், வாருங்கள்,'' என்ருர்.

அவ்வாறே, அம்மூவரும் பிள்ளேயுடன் சென்ற னர். அடியார்களும் புடைசூழ்ந்து வந்தனர். **திருப்பரங்குன்றம், திருவாப்பனூர், திருப்புத்தூர், திருப்பூ வணம், திருக்கானப்பேர், திருச்சுழியல், திருக்குற்ருலம், திருநெல்வேலி** முதலிய பதிகளே ஞான சம்பந்தர் தரிசித்தார். ஆங்காங்கு பதிகங்கள் பாடினுர்.

மதுரை நேயர் மூவரும் அப் பதிகம் கேட்டுப் பக்தி மிகுந்தனர். பின்பு, **இராமேசுவரம்** சேர்ந்தார் பிள்ளேயார். அங்கே சிலநாள் தங்கினுர். அம் மூவரும் பிறரும் உடன் இருந்தனர். பின்பு, பிள்ளே யார் இராமேசுவரத்தை விடுத்தார். வேறு பதி களுக்குச் சென்ருர்.

அப்பால், **மணமேற்குடி** சேர்ந்தார் ஞானசம்பந் தர். அது குலச்சிறை பிறந்த இடம். ஆதலால், அங்கே தங்கினுர். பதிகம் பாடினுர். வந்த காரியம் பலித்துவிட்டது. ஆதலின், பாண்டி நாட்டைத் துறந்து, சோழ நாடு செல்ல விரும்பினுர் அவர். பாண்டியனும் அரசியும், அமைச்சனும் அதனே அறிய வந்தனர். பிள்ளேயாரைப் பிரிய அம்மூவருக்கும்

மனம் இல்லை. அவருடன் செல்லவே சித்தம் வைத்தனர்.

அந்நேசரின் மனநிலையை ஞான சம்பந்தர் தெரிந்து கொண்டார். அவர்களை நோக்கி, ''அன்பர்களே! எனது உரை இது. செவி சாய்த்துக் கேளுங்கள். பாண்டி நாட்டின் பரிபாலனம் நன்கு நடத்தல் வேண்டும். நீங்கள் என்னுடன் வந்துவிட்டால், அரசியல் எவ்விதம் நடப்பது? சிந்தியுங்கள்,'' என்றார்.

மேலும், பிள்ளையார் பேசுவார் :—" வேதத்தை நிந்தித்துவந்த சமணர் மறைந்தனர். அதனால், சைவப் பயிர் முளைத்திருக்கிறது. அதனை ஓம்பி வருதல் உங்கள் கடமை அல்லவா? வேத நெறி ஓங்க, சைவ சமயம் தழைக்க என்னை அழைத்தீர்கள். நானும் வந்து உங்கள் கருத்தை ஈடேறச் செய்தேன். என்னுடன் நீங்கள் வருதல் தகாது. சைவப் பயிரை ஓம்பி வாழுங்கள்.''

மங்கையர்க்கு அரசியும் மந்திரியும் பாண்டியனும் பிள்ளையாரின் சொல்லைச் சிரமீது கொண்டனர். அவரது அடியில் விழுந்து வணங்கினர். கண்ணுக்குமறையும் வரையில் ஆனந்த நீர் சொரிய அவரைத் தொழுது நின்றனர்.

17. அரசியின் பெருமை

திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் தாம் பாடிய **தேவாரம்** என்னும் திருமுறையில் மங்கையர்க்கு அரசியைப் புகழ்ந்து மகிழ்ந்து உரைத்திருப்பது இது :—

மங்கையர்க்கு அரசி! வளவர்கோன் பாவை!
வரிவளைக் கை மடமானி!
பங்கயச் செல்வி! பாண்டிமாதேவி!

செந்துவர் வாயாள், சேலனகண்ணாள்,
சிவன் திருநீற்றினை வளர்க்கும்
பந்தணை விரலாள், பாண்டிமா தேவி!

செய்ய தாமரைமேல் அன்னமே அனைய
சேயிழை! திருநுதல் செல்வி!
பைஅரவு அல்குல் பாண்டிமாதேவி!

முத்தின் தாழ்வடமும் சந்தனக் குழம்பும்
நீறும் தன் மார்பினில் முயங்கப்
பத்தி ஆர்கின்ற பாண்டிமாதேவி!

மண்எலாம் திகழ மன்னனாய் மன்னும்
மணி முடிச் சோழன்தன் மகளாம்
பண்ணின் நேர்மொழியார் பாண்டிமாதேவி!

பெரிய புராணம் பாடிய சேக்கிழார் என்பார் அந்த அரசியைப் புகழ்ந்து பாடியிருப்பது இது :—

வளவர்பிரான் திருமகளார்,
மங்கையர்க்கு அரசியார்,
களபம் அணி முலை திளைக்கும்
தடமார்பில் கவுரியனார்
இளவளை வெண்பிறை அணிந்தார்க்கு
எற்றதிருத்தொண்டு எல்லாம்
அளவு இல் புகழ் பெற விளக்கி
அருள் பெருக அரசு அளித்தார்!

மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம்!
வளவர் திருக் குலக்கொழுந்து வளைக் கை மானி!
செங்கமலத் திருமடந்தை! கன்னி நாடு ஆள்
தென்னர் குலப் பழி தீர்த்த தெய்வப் பாவை!
எங்கள் பிரான் சண்பையர் கோன் அருளினாலே
இருந்தமிழ்நாடு உற்ற இடர் நீக்கித் தங்கள்
பொங்கு ஒளி வெண்திருநீறு பரப்பினாரைப
போற்றுவார் கழல் எல்லாம் போற்றலாமே!

திருத்தொண்டர் புராண சாரம் என்பதில் அரசியைக் குறித்த பாடல் வருமாறு:—

மங்கையர்க்குத் தனி அரசி, வளவர்கோன் கொழுந்து!
மன்னவர் சூழ் தென்னவர்க்கு மாதேவியார்! மண்
சங்கை கெட அமண் சமயம் சாட வல்ல
சைவசிகாமணி! ஞானத் தமிழில் கோத்த
பொங்குதிரு அருள் உடைய போதவல்லி!
பொருவு இல் நெடுமாறனார் புயமேல் வாழும்
செங்கலச முலையாள்! தன் அருளால் இன்பம்
சேர்ந்தவரைப் புகழ்ந்து அடியேன் வாழ்ந்தவாறே.

18. நின்ற சீர் நெடுமாறன்

நெடுமாறன் என்பான் முன்னம் கூன்பாண்டி யன் என்று அழைக்கப் பெற்ருன். அவன் பாண்டி நாட்டை ஆண்டுவந்த அரசர்களுள் ஒருவன். அவன் புயவலியும் போர்வலியும் படைத்தவன். களத்தில் புகுந்தால், வெற்றியுடன் திரும்புவான். ஒருசமயம் திருநெல்வேலியில் பெரும்போர் மூண்டது.

வடபுலத்து அரசர் வந்து வீறுகாட்டி அருஞ்சமர் விளைத்தனர். அப்பாண்டியன் தனது குதிரைப் படையுடன் இரணகளத்தில் புகுந்தான். பகைவரை வாட்டி வதைத்தான். வடபுலத்து அரசர் முதுகு காட்டி ஓடினர். ஓடுகையில் அவ்வேந்தனது வீரத்தை மெச்சி வாழ்த்திப்போயினர்.

அவன் முதலிலே சைவமணியாக விளங்கினுன். இடையிலே சமண சமயிகள் தோன்றி அவனைக் கலைத்தார்கள். வேதநெறியைப் பழித்தார்கள். சைவ சவயத்தை இகழ்ந்தார்கள். அதனுல், அவன் சமணன் ஆனுன். அவனது தேவி திருஞானசம்பந்தரை வரவழைத்து, அவனை நல்வழிப்படுத்தினுள். அவனும் வருந்தித் திருந்தினுன்.

ஞானசம்பந்தரின் அருளினுல் அவனது கூன் நிமர்ந்தது. அழகும் வந்து கூடியது. சைவப் பற்றும் நிரம்பியது. பாண்டி நாட்டிலே சைவப் பயிர் வளர்த்தான் அவன்: அதனுல், அறுபத்து மூன்று நாயன்

மார்களில் ஒருவனாக விளங்கினான். நின்ற சீர்நெடு மாறன் என்று புகழ் பெற்றான். தென்னாட்டில் சிவம்பெருக, செங்கோல் ஓங்க ஆண்டுவந்தான். அவன் புகழ் பெரிய புராணத்தில் நிலவுகின்றது.

திருவிளையாடற் புராணத்திலே பாண்டியன் சுரம் தீர்த்த படலம் என்பதில் அவன் சரிதம் பார்க்கலாம். அப் புராணம் பாடிய பரஞ்சோதி முனிவர் என்பார் அவனைக் குறித்து உரைத்துள்ள பாட்டு இது :—

அன்னது ஒரு காரணத்தால்,
சவுந்தர பாண்டியன் என்று ஆகி, அன்ன
தென்னவர்கோன் கவுணியர்கோன்
திருநோக்கால், பரிசத்தால், தெருட்டும் வாக்கால்,
பொன் அடி தாழ்ந்து, ஐந்து எழுத்தும்
உபதேசப் பேறு அடைந்த பொலிவால், வஞ்சம்
துன் அமணர் நெறி இகழ்ந்து
தொல்வேத நெறி அடைந்து தூயன் ஆனான் !

திருத்தொண்டர், திரு அந்தாதி என்பதில் அவனைப் பற்றிய பாடல் வருமாறு :

சார்த் தண்முகில் கைக்கடல்
காழியர் பெருமாற்கு எதிராய்
ஆர்த்த அமணர் அழிந்தது கண்டு
மற்று ஆங்கு அவரைக்
கூர்த்த கருவியின் நதிவைத்த
பஞ்சவன் என்று உரைக்கும்
வார்த்தை அது கண்டு நெல்வேலியில்
வென்ற மாறனுக்கே.

19. குலச்சிறை நாயனர்

இவரும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். சிவனடியார்களிடம் இவர் பேரன்பு கொண்டனர். அவர்களின் சாதி குலம் இவற்றை இவர் கவனியார். சிவனடியார் என்ற முறையில் எல்லாருக்கும் தொண்டுசெய்வார்.

அந்த அடியார்கள் பலராக வந்தாலும் இவர் கவலை உறுர். அனைவருக்கும் இமைப்பொழுதில் அறுசுவை உணவு தயார் செய்வார். எல்லாரையும் விருப்புடன் அழைப்பார். பந்தியில் அமர்த்துவார். அன்புடன் அமுதுபடைப்பார். இனிய மொழியே பேசுவார்.

இவர், நின்ற சீர் நெடுமாறன் என்னும் பாண்டியனது அமைச்சர். அந்த அரசனது அமைச்சர்களிலே முதல்வராக இருந்தவர். பாண்டிமாதேவியான மங்கையர்க்கு அரசிக்கு உற்ற துணையாக இருந்தவர். சைவம் ஓங்க அந்த அரசிக்கு உதவிசெய்தவர். ஞானசம்பந்தரின் பொன் அடி போற்றியவர். இவர் பிறந்த ஊர் மணமேற்குடி.

சுந்தர மூர்த்தி சுவாமிகள் இவரது சைவப் பற்றை அறியவந்தார். வந்ததும் **பெருநம்பி** என்று சிறப்புப் பெயர் சூட்டினர். நம்பி என்ருல் ஆண்களில் சிறந்தவன் என்று பொருள். பெருநம்பியென்ருல், மிகமிகச் சிறந்தவர் என்று அர்த்தம். வாதிலே சமணர் தோற்றனர் அல்லவா? அவர்களுக்கு இவர் கழுமரம் அமைத்தார்.

இவரைக் குறித்து திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரத்திலே இவ்விதம் பேசியிருக்கிருர் :—

வெற்றவே அடியார் அடிமிசை வீழும்
விருப்பினன் ! வெள்ளை நீறு அணியும்
கொற்றவன் தனக்கு மந்திரி ஆய குலச்சிறை !
கணங்களாய் வரினும், தமியராய் வரினும்,
அடியவர் தங்களைக் கண்டால்,
குணம்கொடு பணியும் குலச்சிறை !
கலம் இலாராக நலமது உண்டாக நாடவர் நாடறிகின்ற
குலம் இலாராகக் குலமது உண்டாகத் தவம் பணி குலச்சிறை !
நாவணங்கு இயல்பாம் அஞ்செழுத்து ஓதி
நல்லார் நல் இயல்பாகும்
கோவணம் பூதி சாதனம் கண்டால்
தொழுது எழும் குலச்சிறை !
தொண்டராய் உள்ளார் திசைதிசை தோறும்
தொழுது தன் குணத்தினைக் குலாவக்
கண்டு நான்தோறும் இன்புறுகின்ற குலச்சிறை !

திருத்தொண்டர் திரு அந்தாதி என்பதில் இவரைப்பற்றிய பாடல் இது :—

அருந்தமிழ் ஆகரன், வாதில் அமணைக்
கழுநுதிமேல்
இருந்தமிழ் நாட்டிடை ஏற்றுவித்தோன்,
எழில் சங்கம் வைத்த
பெருந்தமிழ் மீனவன்தன் அதிகாரி,
பிரசம் மல்கு
குருந்து அவிழ் சாரல் மணமேற்குடி மன்
குலச்சிறையே !